அண்ணுமலைப் பல்கலைக்கழகத்து இசைத்தமிழ் வெளியீடு 5

சுரமேள கலாநிதி

ஐந்தாந் தொகுதி—மூன்ரும் பகுதி

ஆக்கியோர்

சிரோமணி திரு. N. S. தேசிகன் அவர்கள்.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தாரால்

திருச்சி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்டில்

பதிப்பிக்கப்பெற்றது.

1947

உரிமை]

[விலை ரூ. ௧

பொருளடக்கம்.

1. கடவுள் வாழ்த்தும் பல்கலைக் கழக வாழ்த்தும்.

2. செட்டிநாட்டரசரின் நிழற்படம்.

3. செட்டிநாட்டரசர் வாழ்த்து.

4. இசைக் கல்லூரியின் நிழற்படம்.

5. முன்னுரை (டாக்டர். திரு. அ. சிதம்பரநாதச் செட்டியாரவர்கள்) i — vi

6. சுரமேள கலாநிதி

i. உபோத்காதப் பிரகரணம். 1 — 8

ii. சுரப் பிரகரணம். 9 — 17

iii. வீணைப் பிரகரணம். 18 — 27

iv. மேளப் பிரகரணம். 28 — 36

v. இராகப் பிரகரணம். 37 — 51

மகாமகோபாத்தியாய பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

இயற்றியவை

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

பூவார் மணம்போல் உலகமெலாம்
பொருந்தி யியக்கும் பெரும்பொருளே
புனிதம் நிறைந்த வுணர்வுடையோர்
புகழிற் கிடக்கும் புண்ணியனே

நாவார் கலைகள் துணிபொருளா
நவில்நா யகனே மெய்யுணர்வின்
நலமார் வடிவே யகவிருளை
நலிந்து விளங்கி நல்லன்பர்

தூவார் உளத்திற் சுடர்விளக்கே
துகளற் றொடுங்கித் தமைமறந்து
துய்ப்பார்க் கினிய செழுந்தேனே
தோன்றாத் துணையே அறுவரெனும்

மேவார் தமைச்செற் றுளந்தெளிந்தோர்
வினைமா சறுக்கும் மெய்ப்பொருளே
விரும்பிப் பணியும் எம்மையருள்
வெள்ளத் தியைத்துக் காத்தருளே.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்த்து

கட்டளைக் கலித்துறை

கண்ணார் மணியிற் புரப்போ ரெனும்பொருட் கார்பொழிந்த
தண்ணார் நிதிநீர்ச் செழிப்பிற் கலைப்பயிர் தான்வளர்க்கும்
அண்ணா மலைப்பல் கலைக்கழ கப்பே ரணிநிலையம்
விண்ணார் புகழொடு நாளுநா ளுமோங்கி விளங்குகவே.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய

செட்டி நாட்டரசர்

உயர்திரு. டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

உருவச் சிறப்பு

ஊக்கம் உறுதி உணர்ச்சி யருஞ்செயலின்
ஆக்கம் அறம்புகழன் பாண்மைமுதல்—நீக்கமறக்
காண்டற் கமைந்த கவினுரு அண்ணாமலைமன்
ஆண்டகையின் நல்லுருவ மாம்.

மகாமகோபாத்தியாய—பண்டிதமணி

மு. கதிரேசச் செட்டியார்.

மகாமகோபாத்தியாய—பண்டிதமணி

திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் கூறிய

வாழ்த்து

சீர்மலி கொடையால் அறிவினால் ஆற்றுஞ்
செயற்கருஞ் செயலினால் உலகிற்
பேர்மலி புகழாற் பல்கலைக் கழகம்
நிறுவிய பெருமையாற் சிறந்தோன்
ஏர்மலி தருநல் இசைத்தமிழ் வளர்க்கும்
ஏந்தல்நம் செட்டிநாட் டரசாம்
நார்மலி யுளத்தண் ணாமலை வள்ளல்
நலமுற நீடுவா ழியவே.

இசைக்கல்லூரி (அண்ணமலைப் பல்கலைக்கழகம்)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
பேரறிஞர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
எழுதிய

முன்னுரை

சுரமேளகலாநிதி என்பது இராமாமாத்தியர் என்பவரால் வடமொழியில் எழுதப்பட்டுள்ள இசை நூலாகும். இந்நூல் பாயிரம், சுரம், வீணை, மேளம், இராகம் என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது. இராமாமாத்தியர் ஆந்திர நாட்டில் கிருஷ்ணா ஜில்லாவில் உள்ள கொண்டவீடு என்னுமிடத்தில் தோன்றியவர். அவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்நூல் சாகர் சகாப்தம் 1472-க்கு ஒப்பான சாதாரண ஆண்டு ஆவணித்திங்கள் பத்தாம் நாள் (கி. பி. 1550) எழுதி முடிக்கப்பட்டதாக அறிகிறோம்.

இந்நூல் தோன்றுங்காலத்திற்கு முன்னரே பல இசை நூல்கள் தோன்றியிருந்தன. பழந் தமிழகத்தில் முதுநாரை, முதுகுருகு, இசைநுணுக்கம் முதலிய இசை இலக்கண நூல்கள் வழங்கின. அடியார்க்குநல்லார் காலம் வரை (13—14-ஆம் நூற்றாண்டு) இசை நுணுக்கம் வழக்கில் இருந்ததென்பது அவர் அடிக்கடி காட்டும் மேற்கோள்களால் அறியப்படுவது. அன்றியும், இந்திரகாளியம், பரதசேனாபதீயம், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு முதலிய தமிழிசை நூல்களும் அடியார்க்கு நல்லாரால் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுள்ளன. கி. பி. முதல் நூற்றாண்டிலோ நான்காவது நூற்றாண்டிலோ வடமொழியில் பரதர் எழுதிய நாட்டிய சாஸ்திரத்தில் இசைக் கூறுகள் காணப்படுகின்றன. பின்னர், 13-வது நூற்றாண்டில் சாரங்கதேவருடைய சங்கீத ரத்னாகரம் எழுந்தது. சாரங்கதேவர் தென்னாட்டைச் சுற்றிப் பார்த்து அங்கு வழங்கிய தமிழிசை வகைகளை ஆராய்ந்து எழுதிய அந்நூல் கருநாடக இசைக்கு அடிப்படையான நூலாக மதிக்கப்பட்டு வருகிறது.

அதன் பின்னர், இராமாமாத்தியர் இயற்றிய சுரமேள கலாநிதி சாரங்கதேவர் நூலினைச் சிலவகைகளில் அடியொற்றி

நடந்தாலும் சிலவகைகளில் வேறுபடுவதாயிற்று. சங்கீத இலக்கணத்துக்கும், இலக்கியத்துக்கும் ஏதாவது பொருத்தமின்மை காணப்பட்டால் இலக்கியத்துக்கேற்ப இலக்கணத்துக்குப் பொருள் செய்துகொள்வது தக்கதாகும் என்ற சாரங்கதேவர் கருத்தினை இராமாமாத்தியர் நன்ருக வற்புறுத்தியுள்ளார்.

சாரங்கதேவருக்கும் இராமாமாத்தியருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் சில உண்டு. அவற்றுள் விகிருத சுரங்களைப்பற்றிய வேறுபாடு தலைசிறந்ததாகும். சாரங்கதேவர் பன்னிரண்டு விகிருத சுரங்களைப்பற்றி உரைத்தாராக, இராமாமாத்தியரோ தாம் இலக்கியமாகக் கண்ட ஏழு விகிருத சுரங்களைப்பற்றியே எழுதியுள்ளார். அவர் கொண்ட ஏழு விகிருத சுரங்கள் சுயுத ஷட்ஜம், சுயுத மத்தியமம், சுயுத பஞ்சமம், சாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் என்பன.

சாரங்கதேவர் கருதிய அசுயுத ஷட்ஜம் சுத்த ஷட்ஜத்தினின்றும், அசுயுத மத்தியமம் சுத்த மத்தியமத்தினின்றும், விகிருத ரிஷபம் சுத்த ரிஷபத்தினின்றும், விகிருத தைவதம் சுத்த தைவதத்தினின்றும் வேறுபடாததால் இவற்றைத் தனியே எண்ண இராமாமாத்தியர் விரும்பவில்லைபோலும். அவ்வண்ணமே மத்தியம சுருதியிலிருந்து வரும் விகிருத பஞ்சமம் கைசிகி பஞ்சமத்தினின்று வேறுபடாததால் அதனையும் இராமாமாத்தியர் தனியே எண்ணவில்லைபோலும். "இராகவிபோதம்" என்னும் நூலை இயற்றிய சோமநாதர் (கி. பி. 1608) சாரங்கதேவரை ஒட்டிப் பன்னிரண்டு விகிருத சுரங்கள் கொண்டார். அவருக்குப்பின் வந்த வேங்கடமகி (கி. பி. 1637) என்பார் தமது சதுர்த்தண்டிப்பிரகாசிகையில் ஐந்து விகிருத சுரங்களே கொண்டார்.

சாரங்கதேவரோடு இராமாமாத்தியர் இன்னொரு வகையாலும் வேறுபட்டார். சாரங்கதேவர் இருபத்திரண்டு தந்தியையுடைய வீணையைப்பற்றி உரைத்தாராக, இராமாமாத்தியர் நான்கு தந்தி மாத்திரமுள்ள வீணையைப்பற்றி உரைத்தார். சாரங்கதேவர் சுருதி வீணை, சுர வீணை என்ற

இரண்டு வகையே கொண்டாராக, இராமாமாத்தியர் சர்வ ராக சுத்த மேளவீணை, ஏகராக சுத்த மேளவீணை, சர்வராக மத்திய மேளவீணை, ஏகராக மத்திய மேளவீணை, சர்வராக அச்சுதராஜேந்திர மேளவீணை, ஏகராக அச்சுதராஜேந்திர மேளவீணை என ஆறுவகை கொண்டார்.

இராமாமாத்தியர் இருபது மேளங்களைப்பற்றி நான்காவது அத்தியாயத்தில் எழுதியுள்ளார். மூகாரி, மாளவகௌளை, ஸ்ரீராகம், சாரங்கநாடம், இந்தோளம், சுத்தராமக்கிரியா, தேசாக்ஷி, கன்னடகௌளை, சுத்தநாடி, ஆகரி, நாதராமக்கிரியா, சுத்தவராளி, ரீதிகௌளை, வசந்தபைரவி, கேதாரகௌளை, ஹேஜுஜ்ஜி, சாமவராளி, ரேவகுப்தி, சாமந்தா, காம்போஜி ஆகிய இருபது மேளங்களுக்கும் அவர் கூறியிருக்கின்ற இலக்கணங்களைக்கொண்டு நோக்கினால் சாரங்கநாடம். கேதாரகௌளை ஆகிய இரண்டின் இலக்கணங்கள் ஒரே விதமாக இருக்கக் காணலாம். இவ்வாறு அமைந்ததில் ஏதோ பிழை இருந்திருக்கவேண்டும். அப்பிழை ஒருகால் ஏடு பெயர்த்து எழுதினவரால் ஏற்பட்டிருக்கக்கூடும். இராமாமாத்தியர் அவர் காலத்தில் வழக்கிலிருந்த மேளங்களின் பெயர்களைக் குறித்துத் தந்தார் என்றாலும், அவ்விருபது மேளங்களையும் பதினைந்தாகக் குறைக்கக்கூடும் என்று அவரே எழுதியுள்ளார் என்பது நான்காம் அத்தியாயக் கடைசிப் பகுதியால் அறியப்படும். "வசந்தபைரவியினுள் ஹேஜுஜ்ஜி அடங்கும். சுத்த வராளியில் சாமவராளி அடங்கும். பௌளியில் ரேவகுப்தி அடங்கும். கன்னடகௌளையில் சாமந்தம் அடங்கும். சாரங்கநாடத்தில் காம்போஜி அடங்கும். எனவே மூகாரி முதல் கேதாரகௌளை வரையில் பதினைந்து மேளங்களே எஞ்சி நிற்கக் காணலாம்". இவ்வாறு இராமாமாத்தியர் கொண்டவற்றுள் மாளவகௌளை நீங்கலாக மற்றவையெல்லாம் இக்காலத்தில் சேய் ராகங்களாகவே மதிக்கப்படுகின்றன.

இராமாமாத்தியர் இராகங்களைத் தலை, இடை, கடை என மூவகையாகப் பிரித்தார். தோடி, பைரவி, கரகரப்பிரியா, காம்போதி, சங்கராபரணம், கல்யாணி முதலியவை இக்காலத்தில் தலைசிறந்த ராகங்களாகக் கொள்ளப்படவும்,

இவற்றுள் தோடி, சங்கராபரணம் ஆகியவற்றைக் கடைநிலையிலும், காம்போஜியை இடை நிலையிலும் இராமாமாத்தியர் வைத்து எண்ணியுள்ளமை காண்கிறோம். இந்தக் காலத்தில் எல்லா ராகங்களையுமே சட்ஜத்தில் தொடங்கிப் பாடுவது பெருமரபாக இருக்கவும், பௌளி மத்தியமத்தில் தொடங்கிப் பாடப்படுவது என்றும், கேதாரகௌளமும் ரீதிகௌளையும் நிஷாதத்தில் தொடங்கிப் பாடப்படுவன என்றும் இராமாமாத்தியர் எழுதியுள்ளார், இவற்றிலிருந்து வெளியாவது என்னவென்றால் இராகங்களின் பெயர்கள் காலத்திற்குக் காலம் மாறி வந்திருக்கின்றன என்பதாகும்.

இராமாமாத்தியர் தேசி ராகங்களை யெல்லாம் முகாரி முதல் காம்போஜிவரையிலுள்ள இருபது மேளங்களிலோ, முகாரி முதல் கேதாரகௌளை வரையிலுள்ள பதினைந்து மேளங்களிலோ அமைத்துவிடலாம் எனக் கருதினர். சோமநாதரோ முகாரி முதல் சாரங்கம் வரையில் இருபது மேளம் அவசியம் வேண்டும் என விரும்பினர். வேங்கடமகி தாம் கூறிய 55 ராகங்களை முகாரி முதல் கல்யாணி வரை தமது காலத்தில் வழங்கிய 19 மேளங்களுள் அமைத்துவிடலாம் எனக் கருதினர். மேலும், வேங்கடமகி கொண்ட 72 மேளகர்த்தாக்களில் அவர் காலத்திலிருந்த 55 ராகங்களும் அடங்குவதல்லாமல் இனித் தோன்றக்கூடிய வேறு எந்த ராகமும் அடங்கிவிடுமென்பது அவர் கருத்து.

சட்ஜம், சுத்தரிஷபம், சதுசுருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பிரதி மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், சதுசுருதி தைவதம், கைசிகி நிஷாதம், காகலி நிஷாதம் என்ற பன்னிரண்டு சுரத் தானங்களை முன்னையோர் எல்லாம் கொண்டாராக, வேங்கடமகியார் பதினாறு சுரத்தானங்கள் கொண்டார். சதுசுருதி ரிஷபத்தின் இடத்திலேயே வரும் சுத்த காந்தாரம், சாதாரண காந்தார இடத்திலேயே வரும் சதுசுருதி ரிஷபம், சதுசுருதி தைவதத்திலேயே வரும் சுத்த நிஷாதம், கைசிகி நிஷாதத்திலேயே வரும் சதுசுருதி தைவதம் ஆகியவற்றை வேறாக எண்ணி வேங்கடமகியார் கூட்டியுரைத்துள்ளார். அது பொருந்தாது என்பது

"பூர்வீக சங்கீத உண்மை" ஆசிரியர் மதுரைத் திரு. M. K. M. பொன்னுச்சாமி பிள்ளை முதலியோரது கருத்து. மேலும் இயற்கைச் சுரங்களான சுத்தவிகுருதி பன்னிரண்டால் உண்டாகிற 32 மேளங்களைத் தவிர, வேங்கடமகியார் கூட்டியுரைத்த 40 மேளகர்த்தாக்களும் வேண்டப்படுவன அல்ல என ஒரு சாரார் கருதுகின்றனர். வேங்கடமகியாரே தாம் இயற்றிய "இராக லட்சணம்" என்ற நூலில் கடபயாதி முறைப்படி எழுபத்திரண்டு தாய் ராகங்களைக் கணக்கிட்டிருப்பதன்றி அந்த ராகங்களில் எல்லாம் கீதங்கள் இயற்றியிருப்பதாலும், தியாகராஜரும் முத்துசாமி தீட்சதரும் வேங்கடமகியின் புது ராகங்களில் இசைப் பாடல்கள் இயற்றியிருப்பதாலும் அவையும் வேண்டப்படுவன என மற்றொரு சாரார் கருதுகின்றனர். இதிலிருந்து மேளராகங்களின் தொகுதிகளைப்பற்றியும், ஒவ்வொரு மேளத்திலும் அடங்கும் ராகத்தின் எண்ணைப் பற்றியும், மேளம் என்னும் சொல்லின் பொருளைப்பற்றியும் கருத்து வேறுபாடுகள் உள்ளமை புலப்படும். சில வகைகளில் இராமாமாத்தியர் வழுக்கி வீழ்ந்தார் என வேங்கடமகி கருதி வெகுண்டு உரைத்திருக்கிறார். ஆனாலும், "சங்கீத பாரிஜாத" ஆசிரியர் அகோபிலர் (17-ஆம் நூற்றாண்டினர்) இராமாமாத்தியர் முறையைப் பாராட்டியுள்ளார். இராமாமாத்தியர் தாம் வாழ்ந்த காலத்தில் வழக்கிலிருந்தவற்றையே நூலினுள் யாத்துத் தந்தாரென்ற அளவில் நாம் அமைதி காணவேண்டும்.

இனி இராமாமாத்தியர் இசையுலகிற்குச் செய்துள்ள தொண்டுகளைக் காண்பாம். முதலாவதாக, அவர் பரந்துபட்டு விரிவாகச் சங்கீத ரத்னாகரத்திற் கிடந்த பல செய்திகளைத் தொகுத்துச் சுருக்கமாக எழுதியுள்ளார். இரண்டாவதாக, சிலவிடங்களிற் பழைய கொள்கைகள் என்று அஞ்சாமல் அவற்றை மறுத்து இலக்கியத்தின் சிறப்பை நிலைநாட்டியுள்ளார். மூன்றாவதாக, பிற்காலத்திற் போற்றப்படும் வேங்கடமகியார் மேளங்களைப்பற்றி விரிவாக உரைப்பதற்கு வழிகாட்டியாய் உதவியுள்ளார். நான்காவதாக, மார்க்க சங்கீதம், தேசி சங்கீதம் என்ற இவற்றின் வேறுபாட்டைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இந்நூலின் 5-வது அத்தியாயத்தின்

உ

இராமா மாத்தியர்

இயற்றிய

சுர மேள கலா நிதி

உபோத்காதப் பிரகரணம்—1

1- திருமகளிடம் ஆசையாகிற (ஸ்ரீராகம் என்ற ராக மாகிற) சிறந்த நிதியை உடையவரும், கம்பீரமாயும் அழகான தாயுமுள்ள தேகத்தை உடையவரும். சுரஞானம், சுருதி, கிராமம், உயர்ந்த சொற்கள் இவைகளில் மிக ஈடுபட்ட சிறந்த பக்தர்களால் சூழப்பட்டவரும் திருவரங்கத்தில் (அரங்கமேடையில்) ஆசைகொண்டவரும். தொன்மையான நல்ல சிறந்த தாளத்தினுல் அழகிய செயலையுடையவரும், நாதப்பிரமமாக இருப்பவரும், அணிகளால் விளங்கும் தேகத்தையுடையவருமான நாராயணன் (நம் எல்லோரையும்) காப்பாற்றுவராக.

(இராம ராஜாவின் வமிசம்)

2. சாம வேதத்திலிருந்து சங்கீத சாரமும், வேதாந்த சாத்திரத்திலிருந்து தத்துவத்தின் அறிவும் தோன்றினுற்போல முன்பு ஆதி முனிவரான பிரமன் திருமாலின் உந்திக்கமலத்தின் நடுவிலிருந்து தோன்றினுர்.

3. இந்தப் பிரமனிடமிருந்து அத்திரி உண்டானுர், இவருடைய கண்ணிலிருந்து தேவர்களின் பந்துவான சந்திரன் தோன்றினுர். அவரது கிரணங்களின் சேர்க்கையால் கங்கை முதலிய எல்லா நதிகளும் கடலின் உதவி குறித்து உண்டாயின.

4. பவளங்களால் விளங்கப்பெற்றுக் குற்றமற்ற இரத்தினங்களுக்கு இருப்பிடமான கடலைப் பொங்கச் செய்பவனும், கலைகளுக்கு இருப்பிடமானவனுமாகிய இந்தச் சந்திரன் உலகத்தை வயிற்றினுள் அடக்கிய திருமாலுக்குக் கண்ணாக இருந்துகொண்டு காரணப் பொருளுக்குக் காரியத்தால் உண்டாம் பயனைக் காண்பித்தார்.

5. இவருக்குப் புதன் பிறந்தார். புதனுக்குப் புரூரவசு பிறந்தார். புரூரவசுக்குப் புண்ணியம் செய்த ஆயுசு பிறந்தார். ஆயுசுக்கு யயாதியின் தகப்பனாரான நகுஷன் பிறந்தார். அவர் வமிசத்தில் பரதர் முதலிய ஏனையோர் பிறந்தனர்.

6. இவர்களுடைய குலத்திற்கு அணிகலம் போன்றவரும் குபேரனை யொன்றவருமான இந்த ஸ்ரீரங்கராஜர் பிறந்தார். அவர் மக்களுக்குக் களிப்பூட்டித் தமது நல்ல ஒழுக்கத்தினாலேயே ராஜரிஷியின் தன்மையைப் பெற்றார்.

7. அவருக்குத் திம்மாம்பிகை என்ற ஒரு மனைவி இருந்தாள். அவள் நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடம் போலவும், கற்புடையவளாகவும் (சசீ போன்றவளும்) புகழ் பொருந்தியவளாகவும் (யசோதை போன்றவளும்) வணக்கமுடையவளாகவும் (வினதை போன்றவளும்) பொறாமையற்றவளாகவும் (அனசூயை போன்றவளும்) சாமர்த்தியமுள்ளவளாகவும் (சுதக்ஷிணை போன்றவளும்) உண்மையைப் பேசுகிறவளாகவும் (சத்தியவதி போன்றவளும்) மங்களமானவளாகவும் (சுபத்திரை போன்றவளுமாக) இருந்தாள்.

8. அவ்விருவருடைய தவத்தின் பெருமையினால் அரசர்களுக்கெல்லாம் அரசனான இராமராஜர் பிறந்தார். கிருஷ்ணராயர் இவருக்குத் தம் மகளைக் கொடுத்துப் பெண்ணுக்குத் தகப்பனாராக இருப்பது பெரும் பாக்கியம் என்று கருதினார்.

9. தூய நடத்தையை உடைய தருமபுத்திரருக்குப் பயங்கரமான தோள்களையுடைய மேன்மைபொருந்திய பீம அருச்சுனர்கள்போல் இராமராஜருக்குப் புகழ்பெற்ற திம்மராஜர், ஸ்ரீவேங்கடாத்திரி ராஜர் என இரு தம்பிகள் பிறந்தனர்.

இராமராஜரின் வமிசாவளி :—

விஷ்ணு
|
பிரமன்
|
அத்திரி
|
சந்திரன்
|
புதன்
|
புரூரவசு
|
ஆயுசு
|
நகுஷன்
|
யயாதி
|
பரதன்
|
ஸ்ரீரங்கநாதர்
|
இராமராஜர் — திம்மராஜர் — வேங்கடாத்திரி ராஜர்

(இராமராஜரின் பக்தியும் பலமும்)

10. ஆதிசேஷனை வென்ற ராமராஜரின் தோள் பூமியைத் தாங்குகிறது என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அணுவளவுள்ள அவருடைய மனம் உலகபாரத்தை ஏற்பதில் நிகரற்ற சேஷாசலத்தில் உள்ள கடவுளைத் தாங்குகிறது என்பதுதான் ஆச்சரியம். (அதாவது அவர் எப்பொழுதும் திருப்பதியிலுள்ள ஸ்ரீ வேங்கடாசலபதியையே தியானித்துக் கொண்டிருப்பார் என்பது கருத்து).

11. அவர் வாள் ஒன்றையே உதவியாகக்கொண்டு இரு தம்பிகளுடனும் வித்தியாபுரத்தினின்றும் புறப்பட்டுக் குத்திகிரியில் ஆதரவற்ற சதாசிவராஜனையடைந்து, தலைவனுக்குத் துரோகம்செய்த பகையரசரை வென்று, திருமால் துருவனுக்கு

அனுக்கிரகம் செய்ததுபோல் இவனைக் கன்னடத்தில் பத்திரா சனத்தில் தாபித்தார். (அவனுக்குப் பட்டம் சூட்டினார்.)

12. ததீசி, கர்ணன், சிபிச்சக்கரவர்த்தி, ஜீமூதவாகனன் முதலியவர்களுடைய ஜீவனுங்கங்கள் (வீரச் செயல்களுக்குரிய சக்திகள்) போன்ற சத்திகளைப்பெற்ற இராமராஜரால் உருவம் பெற்ற புகழுக்குப் பூமியில் பிரசித்தியானது ஏற்படுத்தப் பட்டது.

13. இரு பக்கங்களிலும் எப்பொழுதும் பிரியாமலிருக்கும் இரு தம்பிகளையுடையவரும் இராமருடைய அவதாரம் போன் றவருமான இராமராஜர் பூமியில் சூரியன் சந்திரன் இவர் களுடன் எப்பொழுதும் கூடியிருக்கும் மேருமலைபோல இரவும் பகலும் விளங்குகிறார்.

14. இவர் போர்களில் பாரசீகர்களை வென்று அவர் களுடைய புகழாகிற கந்தையைக் களைந்து எறிந்துவிட்டுப் பிறகு தன்னுடைய புகழாகிற வெண்பட்டுக்களால் திசை களாகிய இளம்பெண்களை அலங்கரிக்கிறார்.

(அரசரின் மாளிகை)

15. இராமாமாத்தியரால் கட்டப்பட்ட இரத்தினகூடம் என்கிற மாளிகையானது இந்திரனுடைய அரண்மனையை (க்கூட) த் (தனது அழகால்) வென்றுவிட்டதைக்கண்டு அரசர் நிரம்பவும் சந்தோஷமடைந்தவராயும், ஆச்சரியமடைந்த மனத்தையுடையவராயும் ஆனார்.

16. ஒளிகளுக்கெல்லாம் நிதியானதும், அனேக ராஜஹம் சங்களுடன் கூடியதும், அழிவற்றதும், எப்பொழுதும் வெற்றி யைத் தருவதும், தேவசபைபோன்ற அனேக அறைகளையும் விளையாடுமிடங்களையும் உடையதுமான அதை வேறொரு மேருமலை என்றே (மக்கள்) கூறுகின்றனர்.

17. மந்தமாருதத்தினால் அசைக்கப்பெற்ற கொடிகள் (துவஜங்கள்) மந்தார மரக்கிளைகளுடன் சேருவதால் அந்த மாளிகைகளின் இலக்குமியானவள் (அழகானது) தேவர்களின் நந்தனவன இலக்குமியுடன் ஹல்லீசம் என்கிற வட்டமாகச் செல்லும் மகளிர் நாட்டியத்தைச் செய்வதுபோலிருக்கிறது.

18. அதில் வசிக்கும் கன்னிப்பெண்கள் நிறைமதியாகிற கல்லின்மேல் பொம்மைகளின் பாதங்களை ஏற்றிவைத்து (அவைகளுக்கு) விவாகத்தைச் செய்விக்க முயற்சிக்கின்றனர்.

19. அந்த மாளிகைக்குள் (தான்) ராமராஜர் இசை, இயல், சிறந்த கலைகள் இவற்றில் ஆதிசேஷனின் அவதாரம் போன்ற பண்டிதர்களால் சூழப்பட்டவராய்க் காலத்தை மகிழ்ச்சியுடன் கழிக்கிறார்.

20, 21, 22. அவர் (ஒரு சமயம்) சபையில் செவிக்கினிய வையும், இராமாமாத்தியரால் செய்யப்பட்டவையும், ஏலா, ராக கதம்பகம், மாத்ருகம், கத்யப் பிரபந்தம், முப்பத்திரண்டு உயர்ந்த சூடகங்கள், பிரசித்தமான பஞ்சதாளேச்வரம், ஸ்ரீரங்கம், துவிபதம், சுவராங்கம், ஸ்ரீவிலாசம், விளங்கப் பெற்ற விலையிலா விப்ரகீர்ணகம் என்கிற முப்பது பிரபந்தங் கள், மனத்தைக்கவரும் பதினாறு துருவங்கள், பலபொருளுடைய கம்பீரமான பொருணயமுள்ள நாற்பத்தாறு சாலக சூடப் பிரபந்தங்கள், இருபது ராகங்களால் மிகப் பிரசித்தமான பஞ்சரத்தினங்கள், கீதம், அலங்காரம், அக்ஷரங்களின் ஆலா பனம், பர்யாயம் இவைகளுடன் கூடிய பிரபந்தங்களை விருப்பத் துடன் கேட்கச்செய்யும் குரலையுடைய வைணிகர் பாடக்கேட்டு மெச்சினார்.

23. இதற்கிடையில் அரசர்களுக்குச் சிங்கம் போன்றவ ரான ஸ்ரீ வேங்கடாத்திரி என்னும் அரசர் இதுதான் தக்க சமயம் என்று அறிந்து, இசை, இயல் இவைகளில் ஈடுபட்ட இராமராஜரைக் குறித்து (ப்பின்வருமாறு) வணக்கத்துடன் தெரிவித்தார்.

24. "இசைக்கலையில் இலக்கியம் இலக்கணமிரண்டிலும் விரோதம் பலவிதமாகக் காணப்படுகிறது. (இவை) எல்லா வற்றையும் ஒற்றுமைப்படுத்தி ஒரு நூலை இராமமந்திரி (இராமாமாத்தியர்) உமது வார்த்தையினால் செய்யட்டும்."

25. பிறகு ஸ்ரீரங்கராஜரான இராமராஜர் ஆசனத்திற்கு அருகில் வீற்றிருப்பவரும் இசை, இயல் ஆகிய கலைகளின் நுட்பத்தை யறிந்தவருமான இந்த இராமாமாத்தியரைக் குறித்துப் பின்வருமாறு சொன்னார்.

26. இவ்வுலகில் சிலர் இலக்கணத்தைமட்டும் அறிந்தவர்களாகவும், சிலர் இலக்கியத்தை மட்டும் அறிந்தவர்களாகவும் இருக்கின்றனர். இலக்கியம் இலக்கணம் என்னும் இரண்டின் சாரத்தையும் அறிந்த உம்மைப்போல் வேறொருவரும் காணப் படவில்லை.

27. கல்விக்களஞ்சியமானவரும் கானக்கலையில் தத்திலர் போல் புகழ்பெற்றவருமான கல்லப தேசிகர் என்பவர் உமது பாட்டனார் (தாயின் தந்தை) ஆவர். அக் குடிப்பிறப்பால் உம்மிடம் கந்தருவ நூலிலுள்ள அவை அவரைவிட (நன்கு) விளங்குகின்றன.

28. இசை நூலில் வெவ்வேறு கொள்கைகள் இருக்கின்றன. அவைகளின் சாரத்தை எடுத்துச் சுருக்கமானதும் இனிமையானதுமான ஓர் இசை நூலை இயற்றுவீராக.

29. முன்பு பதஞ்சலியானவர் பாணினியின் சாத்திரக் கொள்கைப்படிச் சொற்களின் வரையறையைச் செய்ததுபோல் நீவிரும் பரதர் முதலியவர்களின் கொள்கைப்படிச் சுலபமான சுரப் பிரமாணத்தை இயற்றுவீராக.

30. இவ்விதம் மகிழ்ச்சி நிரம்பிய மனத்துடன் சொல்லி விட்டு இவருக்குக் கற்பூரத்துடன் கூடிய வெற்றிலையைக் கொடுத்தார். இராமமந்திரி அதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு அரசரின் கட்டளையை ஆமோதித்துப் புதிய நூலைப் பற்றி ஆலோசித்தார்.

31. அரசர் எல்லாவற்றிலும் சிறந்த கோண்டவீடம் என்கிற முக்கியமான அரணை உண்டுபண்ணி, கீழ்க்கடலால் சூழப்பட்ட நிலத்திற்கு அதிகாரியாகவும் என்னை ஆக்கினார்.

32. அங்கு அரசர் தம் கொடையினால் பல அக்கிர காரங்களைக் கட்டி, அவைகளில் அந்தணர்களை வசிக்கும்படிச் செய்து அவர்களுடைய அனுக்கிரகத்தினால் பெருங்கீர்த்தியை அடைந்தார்.

33. அரசர் இரத்தினம் இழைத்த முத்துமாலைபோல் ஜெஹூரி சிம்மாசனம் என்கிற பட்டணத்துடன் கூடிய கீழ்க் கடலுக்கு என்னை அரசனாக்கித் தன்னையொத்த சிறப்புடைய வனாகச் செய்துவிட்டார்.

(இராமாமாத்தியரின் நன்றி)

34. உலகில் இழிநிலையடைந்தோர்க்கு உதவிபுரிய விருப்பமுள்ள இவ்வரசன் தினந்தோறும் மிகச் சிறந்த பரிசுகளை ஆதரவுடன் எனக்கு அளிக்கிறான். இவனை மகிழ்விக்கச் செய்வதற்கு நான் சக்திவாய்ந்தவனாயிருக்கிறேன்.

35. விரைவில் சுர மேள கலா நிதியைச் செய்து அதை அரசருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்து எனது நன்றியைச் செலுத்தக்கடவேனாக.

36. இவ்விதம் தீர்மானித்து இயல், இசை என்கிற இலக்குமிக்கு (செல்வத்திற்கு)த் தகுதியுள்ள நாயக (அவைகளில் நிபுண) னாவனும் இராம மந்திரி என்கிற பெயருள்ளவனுமான நான் அதை (சுர மேள கலாநிதியை)ச் சொல்ல ஆரம்பிக்கிறேன்.

(விஷய அட்டவணை)

37, 38. இராமாமாத்தியரால் செய்யப்பட்ட இந்த சுர மேள கலாநிதியில் முதலில் உபோத்காதப்பிரகரணம், (முகவுரை) பிறகு சுரப்பிரகரணம் அதன்பின் வீணாப்பிரகரணம், மேளப்பிரகரணம், இராகப்பிரகரணம் என ஐந்து பிரகரணங்கள் இருக்கின்றன.

39-40½. முகவுரைக்குப் பிறகு இராமாமாத்தியரால் இரண்டாவதான அந்தச் சுரப்பிரகரணத்தில் இசையின் மேன்மை, காந்தர்வம், கானம் என்கிற பிரிவுகள் இசை நிலைகள், சுருதிகள், சுத்த விகிருதசுரங்கள், இலக்கணம், இலக்கியம் இவைகளுக்குப் பொருத்தமான எல்லாச் சுரங்களின் பெயர்கள் ஆகிய இவை சொல்லப்படுகின்றன.

40½-43. மூன்றாவதான வீணாப்பிரகரணத்தில் வீணையின் மேன்மை, வீணையில் சுருதியைக் கூட்டும் முறை, சுத்த விகிருத சுரத் தொகுதிக்குப் பிரமாணத்தை ஏற்படுத்துவது, முதலில் சுத்த மேள வீணை, பின்பு மத்திய மேள வீணை, மூன்றாவதாக அச்சுத இராஜேந்திர வீணை என்பன சொல்லப்படுகின்றன

44, 45. நான்காவதான மேளப்பிரகரணத்தில் மேளங்களின் இருபது வகைகள். அம்மேளங்களிலிருந்து உண்டான ராகங்கள், அவைகளின் தனித்தனிப் பெயர்கள், அவைகள் ஒருபக்ஷத்தில் யந்திரத்தில் (கருவியில்) பதினைந்து என்பதும், காத்திரத்தில் (கண்டத்தில்) இருபது என்பதும் சொல்லப் படுகின்றன.

46, 47. ஐந்தாவதும் மிகச் சிறந்ததுமான இராகப்பிர கரணத்தில் உத்தமம், மத்தியமம், அதமம் என்கிற இராகங் களின் மூன்று பிரிவுகளும், உத்தமம், மத்தியமம் என்கிற இராகங்களின் இலக்கணங்களும், பின்பு சில அதமராகங் களின் இலக்கணங்களும் சொல்லப்படுகின்றன. பொருள் களின் சுருக்கம் இவ்வாறும்.

இவ்விதம் அபிநவ பரதாச்சாரியரும், வாக்கேயகாரரும்
தோடரமல்ல திம்மாமாத்தியரின் குமாரருமான
இராமாமாத்தியரால் செய்யப்பட்ட
சுர மேள கலாநிதியில் முதலாவதான
உபோத்காதப்பிரகரணம் முற்றிற்று.

சுரப்பிரகரணம்—2

(இசையின் மேன்மை)

பிரமதேவர் சாமவேதத்திலிருந்து இந்த இசையை எடுத்தார். எல்லாவற்றையும் அறிபவரான பார்வதீபதியும் இசையினால் மகிழ்ச்சியடைகிறார். அழிவற்றவரான கோபீபதியும் (கிருஷ்ணனும்) குழலின் ஒலிக்கு வசப்பட்டிருக்கிறார். சாமகானத்தில் பிரமதேவர் ஈடுபட்டார். சரசுவதி வீணையில் ஈடுபட்டாள். (ஆகவே) ஏனைய இயக்கர், கந்தருவர், தேவர், தானவர், மனிதர்கள் இவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா ?

(மேலும்) புலன்களின் இன்பநுகர்ச்சியை அறியாத தொட்டிலில் அழுதுகொண்டிருக்கும் குழந்தையும் இசையமுதைப் பருகிப் பெருங்களிப்பைப் பெறுகிறது. காட்டில் புல் மேய்ந்து திரியும் மான் குட்டியும் மற்ற மிருகங்களும் வேடனின் பாட்டில் பேராசைகொண்டு தங்கள் உயிரையே கொடுக்கின்றன. கருநாகம்கூடப் பாட்டைக்கேட்டுக் களிப்படைகிறது. அத்தகைய இசையின் மேன்மையை எவர்தான் புகழமுடியும் ?

இசையின் மேன்மை இவ்வாறும்.

(இசையின் பிரிவுகள்)

(செவிகளுக்கு) இன்பமளிக்கும் சுரங்களின் சேர்க்கையே கீதம் (இசை) எனப்படும்.

இது காந்தருவம், கானம் என இருவகைப்படும். எது தொன்றுதொட்டுக் கந்தருவரால் உபயோகிக்கப்பட்டும், மோட்சத்திற்கு நிச்சயமான காரணமாகவும் ஆகிறதோ, அதுவே காந்தருவம் என்று சொல்லப்படுகிறது.

எது இலக்கணத்துடன் கூடியதாயும், வாக்கேயகாரரால் (பாட்டு இயற்றவும், பாடவும் வல்லவர்) தேசிராகம் முதலியவைகளில் பாடப்பட்டதாகவும் மக்களுக்கு இன்பமளிப்பதாகவும் இருக்கிறதோ அதற்குக் கானம் என்று பெயர்.

அவற்றுள் காந்தருவம் என்பது இலக்கணத்தை ஒட்டியே பிரயோகிக்கப்படுகிறது.

எதற்கு இலக்கணத்தை விடுவதனால் குற்றம் ஏற்படாதோ அது இலக்கியப்பிரதானம் (இலக்கியத்தை முக்கியமாகக் கொண்டது) ஆகுமேயன்றி இலக்கணப் பிரதானம் (இலக்கணத்தை முக்கியமாகக் கொண்டது) ஆகாது

கானம் என்பது இலக்கியப் பிரதானமாகும் இலக்கணப் பிரதானமாகாது. இந்த இலக்கியத்தை விட்டுவிட்டால் இதற்கு ரஞ்சனமே ஏற்படாது. ஆகையால் கானம் உலகத்தில் இலக்கியத்தை ஒட்டியே ஏற்படுகிறது.

எல்லாச் சங்கீதக் கலையின் பொருளையுமறிந்த சார்ங்கசூரி என்பவர் வாத்திய அத்தியாயத்தில் கானம் இலக்கியப்பிரதானமாக இருக்கிறது என்பதை நிரூபித்திருக்கிறார். (அது பின் வருமாறு)

சிலர் இந்த சாஸ்திரங்களை (தேசிகானங்களை) இலக்கியத்தையே பிரதானமாகக் கொண்டதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே இலக்கியத்திற்கு விரோதமான சாஸ்திரங்களை வேறு விதமாகச் சமர்த்திக்கவேண்டும். (விளக்கவேண்டும்)

அல்லது கிரகம், அம்சம், நியாசம் என்கிற நியமங்கள் சங்கீத சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. மற்ற சுரங்களுடைய கூட்டமும் (அபந்யாசம் முதலியவை) சாஸ்திர விரோதமின்றி இலக்கியத்தில் காணப்படுகின்றன. ஆகையால் சார்ங்கதேவசூரியால் எல்லாத் தேசிராகங்களிலும் இலக்கணத்திற்கு விரோதமான இலக்கியங்களிலெல்லாம் இப்பரிகாரம் நிர்ணயிக்கப்பட்டது.

அவராலேயே கானம் இலக்கணத்தை ஒட்டியிருக்கிறது என்பதும் சொல்லப்பட்டது. ஆகையால் (நான்) இலக்கியத்தையே பிரதானமாக வைத்துக்கொண்டு இதன் (கீதத்தின்) இலக்கணத்தைச் சொல்லுகிறேன். இவ்விதம் இசை முழுவதும் இருவிதமாக இருப்பது அறியத்தக்கது.

இசையின் பிரிவுகள் இவ்வாறும்.

(ஒலி)

ஆன்மா பேசுவதற்கு ஆசைப்பட்டு மனத்தைத் தூண்டுகிறது. மனம் உடலிலிருக்கும் அக்கினியை (சூட்டை)க் கிளப்புகிறது. அது காற்றைத் தூண்டுகிறது. பிரமக்கிரந்தியில் உள்ள அது (காற்று) கிரமமாக மேலே கிளம்பி உந்தி, மார்பு, கழுத்து, தலை, வாய் என்கிற இடங்களில் ஒலியை உண்டாக்குகிறது.

(ஸ்தானங்கள்)

ஐந்து ஸ்தானத்திலிருக்கும் நாதம் முறையே, அதிசூக்ஷ்மம், சூக்ஷ்மம், புஷ்டம், அபுஷ்டம், கிருத்திரிமம் என ஐவகைப்படும். ஆனால் வழக்கில் இது மூன்றுவிதமாகவே உளது. மார்பில் மந்தரம் என்றும், கழுத்தில் மத்தியம் என்றும், தலையில் தாரம் என்றும் சொல்லப்படுகிறது. மேன்மேலுள்ள ஸ்தானம் (முன்னைய ஸ்தானத்தைக் காட்டிலும்) இரட்டித்த (ஒலிபெற்ற) தாக இருக்கும்.

ஸ்தானங்கள் இவ்வாறும்.

(சுருதிகள்)

அந்த ஒலி இருபத்திரண்டு பிரிவுகள் உள்ளதாக இருக்கிறது. அவைகள் கேட்கப்படுவதால் சுருதிகள் எனப்படுகின்றன.

இருதயத்தில் மேல் நோக்கியுள்ள ஒரு நாடியில் இருபத்திரண்டு நாடிகள் குறுக்காக ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளில் காற்றினால் அடிக்கப்பட்டு அவ்வளவு எண்ணிக்கையுள்ள சுருதிகள் மேல்மேல் உரத்த ஒலியுடையவைகளாகப் படிப்படியாக உண்டாகின்றன. இவ்விதமே கழுத்து, தலை இவைகளிலும் இருபத்திரண்டு சுருதிகள் ஆம் என்க.

சுருதிகள் இவ்வாறும்.

(சுரங்கள்)

சுருதிகளிலிருந்து ஷட்ஜம், ரிஷபம். காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற ஏழு சுரங்கள் உண்டாயின. அவைகளுக்கு ச, ரி, க, ம, ப, த, நி என வேறு பெயரும் (குறிகளும்) உண்டு.

எது சுருதியைப் பின்பற்றி வந்ததாயும் மிருதுவாகவும் தொடர் ஒலி (அநுரணனம்) ரூபமாகவும் இருந்துகொண்டு, கேட்போரின் செவிக்குத் தானாகவே இன்பமளிக்கிறதோ அதுவே சுரம் எனப்படும்.

இவ்விஷயம் வீணையில் நன்றாக விளங்கும். அதன் நான்காவது சுருதியில் ஷட்ஜமும், ஏழாவதில் ரிஷபமும், ஒன்பதாவதில் காந்தாரமும், பதின்மூன்றாவதில் மத்தியமும், பதினேழாவதில் பஞ்சமமும், இருபதாவதில் தைவதமும், இருபத்திரண்டாவதில் நிஷாதமும் உண்டாகின்றன. இவ்விதம் சுருதிகளில் சுரங்கள் உண்டாகின்றன.

சுத்தசுரங்கள் ஏழு :—

சுருதிகளின் எண்.	சுத்தசுரங்கள்.
1	
2	
3	
4	
—	ஸ
5	
6	
7	
—	ரி
8	
9	
—	க
10	
11	
12	
13	
—	ம
14	
15	
16	

17
— ———— ப
18
19
20
— ———— த
21
22
— ———— நி

இரு சுருதிகளிலிருந்து நிஷாதமும் காந்தாரமும், மூன்று சுருதிகளிலிருந்து தைவதமும் ரிஷபமும், நான்கு சுருதிகளிலிருந்து ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் என மூன்றும் உண்டாகின்றன.

ஆக்ஷேபம்:—நான்காவது முதலிய சுருதி இவ்வாறு (ஷட்ஜம் முதலிய) சுரங்களுக்கு இங்ஙனம் காரணமாக இருக்கட்டும். நான்கு சுருதிகளில் முந்தியவைகளான மூன்ருவது முதலியவைகள் எப்படிக் காரணமாகும்?

சமாதானம்:—இங்கு நான்காவது மூன்ருவது முதலிய சுருதிகள் முந்தியவற்றைக் குறிக்கின்றன. ஆகையால் முந்தியவைகளும் இதற்கு (சுரம் உண்டாவதற்கு)க் காரணமாகின்றன என்று துணியப்படுகின்றது.

(சுத்த விகிருத சுரங்கள்)

ஷட்ஜம் முதலிய இந்த ஏழு சுரங்களும் சுத்தசுரங்கள் எனப்படும். விகிருதசுரங்களும் ஏழாகும். ஆகவே (மொத்தம் சுரங்கள்) பதினுன்காயின.

ஆக்ஷேபம்:—ரத்னுகரத்தில் சார்ங்கதேவரால் விகிருத சுரங்கள் பன்னிரண்டு எனச் சொல்லப்பட்டிருக்கின்றன. உம்மால் அவை ஏழு என்று எப்படிச் சொல்லப்பட்டன?

சமாதானம்:—உண்மைதான். இலக்கணத்தையொட்டிப் பன்னிரண்டு விதங்கள் ஏற்படுகின்றன. (ஆனுல்) ஆதார சுருதியை விட்டுவிடும்பொழுது வேறு ஒலிகள் தோன்றுவதால் சுத்தசுரங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக ஏழு சுரங்களே காணப்படுகின்றன.

மிகுந்த ஐந்து விகிருத சுரங்களும் முந்திய சுரத்தின் சுருதியை எடுத்துக்கொள்வதாலும், தனக்கு முந்திய சுருதியைத் தள்ளுவதாலும் முற்கூறப்பட்ட சுரத் தொகுதியிலிருந்து இலக்கணத்தால் வேறுபடினும் ஆதார சுருதியில் நிலைபெற்றிருத்தலால் இலக்கிய வேறுபாடில்லையாம்.

அவை எப்படி ஒன்றுபட்டிருக்கின்றன என்பதை இலக்கியத்தையனுசரித்து நிரூபிப்போம்.

சுத்த ஷட்ஜத்தைக் காட்டிலும் அச்யுத ஷட்ஜம் வேறுபட்டதல்ல. அச்யுத மத்யமம் சுத்த மத்தியத்தைக் காட்டிலும் வேறுபட்டதல்ல. சுத்த ரிஷபத்தைக் காட்டிலும் விகிருத ரிஷபம் வேறுபட்டதல்ல. சுத்த தைவதத்தைக் காட்டிலும் விகிருத தைவதம் வேறுபட்டதல்ல. மத்தியம சுருதியை எடுத்துக்கொள்ளும்பொழுது யாதொரு விகிருத பஞ்சமம் உண்டாகிறதோ அது மூன்று சுருதிகளையுடைய விகிருத பஞ்சமத்தைக் காட்டிலும் வேறுபட்டதல்ல.

முன் சொன்ன பதினான்கு (சுத்த விகிருத) சுரங்களிலேயே ஐந்து விகிருத சுரங்களும் அடங்கியிருப்பதால் அவை தனியாக என்னால் சொல்லப்படவில்லை.

(ஏழு விகிருத சுரங்கள்)

இனி ஏழு விகிருத சுரங்களின் பெயர்க் குறிப்புடன் இலக்கணத்தை விளக்குவோம். அவைகளின் பெயர்கள் பின் வருமாறு:—(1) ச்யுத ஷட்ஜம், (2) ச்யுத மத்யமம், (3) ச்யுத பஞ்சமம், (4) சாதாரண காந்தாரம், (5) அந்தர காந்தாரம், (6) கைசிக நிஷாதம், (7) காகலி நிஷாதம்.

ஷட்ஜமானது எப்பொழுது தனக்கு ஆதாரமான நான்காவது சுருதியை விட்டுவிட்டு மூன்றாவது சுருதியை அடைகிறதோ அப்பொழுது அது ச்யுத ஷட்ஜம் எனப்படுகிறது.

ச்யுத மத்தியமமும் ச்யுத பஞ்சமமும் இம்மாதிரியே இலக்கணங்களுடையனவாம்.

காந்தாரம் சுத்த மத்தியமத்தின் முதல் சுருதியை அடைந்து சாதாரண காந்தாரம் எனப்படுகிறது. அது (காந்தாரம்) சுத்த மத்தியமத்தின் இரண்டாவது சுருதியை அடைந்ததாக அந்தர காந்தாரம் என்று வழங்கப்படுகிறது.

நிஷாதம் சுத்த ஷட்ஜத்தின் முதல் சுருதியை யடைந்தால் அதற்குக் கைசிக நிஷாதம் என்று பெயர்.

நிஷாதம் சுத்த ஷட்ஜத்தின் இரண்டாவது சுருதியை யடைந்தால் அதற்குக் காகலி நிஷாதம் என்று பெயர்.

இவ்விதம் ஏழு சுரங்களின் இலக்கணமும் சொல்லப் பட்டன.

விகிருத சுரங்கள் ஏழு

சுருதிகளின் எண்.		விகிருதசுரங்கள்.	இராமாமாத்தியர் இட்ட தனிப் பெயர்கள்.
1	——	கைசிகி —நி	ஷட்சுருதி —த
2	——	காகலி —நி	————
3	——	ச்யுத —ச	ச்யுதஷட்ஜ —நி
4	— ச		
5			
6			
7	— ரி		
8			
9	க —	———— ————	பஞ்ச சுருதி —ரி
10	——	சாதாரண —க	ஷட்சுருதி —ரி
11	——	அந்தர —க	————
12	——	ச்யுத —ம	ச்யுதமத்தியம —க
13	ம —		

14
15
16 —— ச்யுத —ப ச்யுதபஞ்சம —ம
17 ப
—
18
19
20 த
—
21
22 நி ———————— பஞ்ச சுருதி —த
—

(வேறு பெயர்கள்)

இப் பதினான்கு சுரங்களுள் சில சுரங்களுக்கு வியவகாரம் சித்திப்பதற்காக வேறு பெயர்களை(யும்) கூறுவேன்.

ச்யுத ஷட்ஜம் இவ்வுலகத்தில் நிஷாதம் எனப்படுகிறது (ஆகையால்) அதற்கு ச்யுதஷட்ஜ நிஷாதம் என்ற பெயர் விதிக்கப்படுகிறது.

(அதுபோலவே) ச்யுத மத்தியமம் காந்தாரம் என்று வழங்கப்படுவதால் அதற்கு ச்யுதமத்தியம காந்தாரம் என்று என்னால் பெயர் கொடுக்கப்படுகிறது.

ச்யுத பஞ்சமம் உலகவழக்கில் மத்தியமம் எனப்படுகிறது. ஆகையால் அது ச்யுதபஞ்சம மத்தியமம் என்று நம்மால் சொல்லப்படுகிறது.

இலக்கியத்தில் சிலவிடங்களில் ரிஷபம் சுத்த காந்தார ஸ்தானத்தையடைவதால் அது பஞ்ச சுருதி ரிஷபம் என்று நம்மால் சொல்லப்படுகிறது.

அந்த ரிஷபம் சாதாரண காந்தார ஸ்தானத்திலிருந்தால் இலக்கியத்தையொட்டி ஷட்சுருதி ரிஷபம் எனப்படுகிறது.

தைவதம் சுத்த நிஷாதத்தின் ஸ்தானத்திலிருந்தால் இலக்கியத்தையனுசரித்து அது பஞ்ச சுருதி தைவதம் எனப்படுகிறது.

தைவதம் கைசிக நிஷாதத்தின் ஸ்தானத்திலிருந்தால் அது இலக்கியத்தையனுசரித்து நம்மால் ஷட்சுருதி தைவதம் எனப் படுகிறது.

மேலே சொல்லப்போகும் ராகம் மேளம் இவற்றைச் சுலபமாக அறிவதன்பொருட்டு முன்புசொன்ன சுரங்களின் வரிசைகள் (மறுபடியும்) சுருக்கிச் சொல்லப்படுகின்றன.

அவ்வப்பெயர்களுடன் 'சுத்த' என்கிற சொல்லை முதலில் உடைய சுரங்கள் ஏழும் சுத்த சுரங்களாகும்.

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம், (என்ற) இவை ஏழும் சுத்த சுரங்களாகும்.

ச்யுத ஷட்ஜ நிஷாதம், ச்யுத மத்தியம காந்தாரம், ச்யுத பஞ்சம மத்தியமம், சாதாரண காந்தாரம், கைசிக நிஷாதம், காகலி நிஷாதம், அந்தர காந்தாரம் என்கிற இவை ஏழும் விகிருத சுரங்கள் எனப்படும்.

சுத்த காந்தாரமே பஞ்ச சுருதி ரிஷபம் எனப்படும். சாதாரண காந்தாரமே ஷட்சுருதி ரிஷபம் எனப்படும்.

சிலவிடங்களில் கானம் என்கிற இசையின் கொள்கையை அனுசரித்து ராகங்களின் மேளனம் (சேர்க்கை) வேறுவிதமாக இருக்கிறது.

சுத்த நிஷாதத்திற்குப் பஞ்ச சுருதி தைவதம் என்ற வேறு பெயரும், கைசிக நிஷாதத்திற்கு ஷட் சுருதி தைவதம் என்ற வேறு பெயரும் சொல்லப்படுகின்றன.

இப் பதினான்கு சுரங்களும் ஒவ்வொரு ராகத்திலும் வருகின்றன. ஏழு சுரங்கள் கிரமமாக மூன்று ஸ்தானங்களில் வருகின்றன. அதிகமானவை எங்கும் வராதனவாம்.

இவ்விதம் அபிநவபரதாச்சாரியாரும் வாக்கேயகாரரும்
தோடரமல்ல திம்மாமாத்தியரின் குமாரருமான
இராமாமாத்தியரால் செய்யப்பட்ட
சுர மேள கலா நிதியில் இரண்டாவதான
சுரப்பிரகரணம் முற்றிற்று.

வீணைப் பிரகரணம்—3

(வீணையின் மேன்மை)

இனி ராகங்களுக்குக் காரணமான சுரங்களின் மேளங்கள் (சேர்க்கை) சொல்லப்படுகின்றன. அவைகள் வீணையில் தான் நன்ருக விளங்குகின்றன. ஆகையால் வீணை இலக்கியம் இலக்கணம் இவைகளை அனுசரித்துச் சொல்லப்படுகிறது.

வீணையின் தண்டம் சிவன், தந்தி பார்வதி, ககுபம் (தந்திகளைக் கட்டுவதற்காகத் தண்டத்தின் முனையிலுள்ள கட்டை) விஷ்ணு, பத்திரிகை (தந்திகளுக்கு ஆதாரமான பித்தளைத் தகடு) இலக்குமி, சுரைக்காய் பிரமன், நாபி (சுரைக்காயைத் தண்டத்துடன் சேர்க்கும் வட்டமான பித்தளைத்துண்டு) சரசுவதி, தோரகம் (தந்தியைச் சேர்க்கும் கயிறு அல்லது கம்பி) வாசுகி, ஜீவா (இனிய ஒலியை உண்டாக்குவதற்காக உபயோகிக்கப்படும் பட்டு நூல் அல்லது பருத்தி நூல் அல்லது கம்பளி நூல்) சந்திரன், மெட்டுக்கள் சூரியன். இவ்விதம் எல்லாத் தேவர்களின் சொரூபமாயும், மிகவும் சுடமானதாயுமுள்ள இவ் வீணை பிரமஹத்தி முதலிய பாவங்களினுல் இழிந்த மக்களையும் தூய்மை செய்கிறது.

இதைப் பார்ப்பதும் தொடுவதும் இன்பமான சுவர்க்கம், மோட்சம் இவைகளை அளிக்கும். இவ்விதம் சங்கீதநிபுணர்களான பரதர் முதலிய முனிவர்களால் வீணை புகழப்பட்டிருக்கிறது. ஆகையால் இது மிகவும் மேன்மையான வாத்தியம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்குவிதப் பேறுகளுக்கு வீணையே சாதனமாக உள்ளது.

ஒரு அந்தணர் வாய்ப்பாட்டுப் பாட, வேறு இரு அந்தணர்கள் அவரை அனுசரித்து வீணை வாசிக்கவேண்டும் என்று வேதம் கூறுகிறது. அசுவமேதப் பிரகரணத்தில் வீணை அறத்திற்குச் சாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வீணை வாசிப்பில் ஆசைகொண்ட அரசர்களிடமிருந்து வைணிகர்கள் தங்களுக்கு விருப்பமான பொருள்களைப் பெறுகின்றனர். ஆகையால் வீணை பொருளுக்கும் சாதனமாக விருக்கிறது.

பாடுகிற ஆண்களைப் பெண்கள் விரும்புகிறார்கள் என்று வேதத்தில் கானம் காமத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாட்டின் உற்பத்தி வீணையிலேயே ஏற்படுகிறது.

வீணை வாசிப்பதை உண்மையாக அறிந்தவனும், சுருதி, ஜாதி, இவைகளை ஆராய்ந்தவனும், தாளத்தை அறிந்தவனும் சிறிதும் கஷ்டமின்றி மோட்சத்தைப் பெறுகிறான் என்று யாக்ஞவல்கியரால் வீணை மோட்சத்திற்குச் சாதனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது உருத்திரனுக்குப் பிரியமாயிருத்தல் பற்றி உருத்திர வீணை எனப்படுகிறது.

வீணையின் மேன்மை இவ்வாறும்.

(வீணையின் பிரிவுகள்)

அது இலக்கியத்தில் சுத்த மேள வீணை, மத்திய மேள வீணை, அச்சுதராஜேந்திர மேள வீணை என மூன்றுவிதமாகக் காணப்படுகிறது. இவ் வீணைகள் ஒவ்வொன்றும் இருவகைப் படும்.

எல்லா ஸ்தானங்களிலும் எல்லாச் சுரங்களுடனும் கூடிய வீணை சர்வராக மேள வீணை என்று முதலானதொன்றாகச் சொல்லப்படுகிறது.

ஒவ்வொரு ராகத்திற்கும் தகுந்தபடி சுரங்களைக் கூட்டுவதற்காக நடுவிலுள்ள மெட்டுக்களின் அமைப்பையுடைய வீணை ஏகராக மேள வீணை என்று இரண்டாவதாகச் சொல்லப்படுகிறது.

மத்திய மேள வீணை என்கிற வீணையில் மூன்றாவது விதமாக ஒரு வீணையும் சிலரால் விரும்பப்படுகிறது. அதாவது அவ்வீணையின் முதல் மூன்று தந்திகளை விட்டுவிட்டு ஷட்ஜத்

துடன் கூடியதான நான்காவதில் மூன்று ஸ்தானங்களின் மெட்டுக்களையும் சேர்க்கவேண்டும். அது ஒரே தந்தியை யுடையதாக விருக்கும்.

இத்தகைய வீணை மத்திய மேள வீணையிலேயே அடங்கி யிருப்பதால் இது இலக்கியத்தில் தனியாகக் காணப்படவில்லை.

சுத்த மேளம், மத்திய மேளம், அச்சுதராஜேந்திர மேளம் என்கிற (வீணை) மூன்றின் இலக்கணங்களை இலக்கிய மார்க்கத்தை யனுசரித்துச் சொல்லுவோம்.

ஆறுவித வீணைகள் :

- உருத்திர வீணை
  - சுத்த மேள வீணை
    - சர்வராக வீணை (1)
    - ஏகராக வீணை (2)
  - மத்திய மேள வீணை
    - சர்வராக வீணை (3)
    - ஏகராக வீணை (4)
  - அச்சுதராஜேந்திர மேள வீணை
    - சர்வராக வீணை (5)
    - ஏகராக வீணை (6)

(1. சுத்த மேள வீணை)

முதலில் சுத்த மேளம் என்கிற வீணையின் இலக்கணம் சொல்லப்படுகிறது. இலக்கியத்தை (வழக்கை) அறிந்தவனும் நிபுணனுமான ஒரு சிற்பியினால் செய்யப்பட்ட வீணையின் மேற்பக்கத்தில் நான்கு உலோகத் தந்திகளைக் கட்டவேண்டும். வலது பக்கத்தில் இத் தந்திகளுக்குக் கீழ் மூன்று வேறு தந்திகளையும் கட்டவேண்டும்.

இந்த ஏழு தந்திகளிலும் எப்படி சுரங்களை அமைக்க வேண்டும் என்பதை இனிச் சொல்லுவோம்

(சுரங்களின் அமைப்பு)

இடது பக்கத்தில் மேலே உள்ள நான்கு தந்திகளுள் முதலாவதான தந்தியில் அநுமந்தர ஷட்ஜம் என்கிற சுரத்தை யமைக்கவேண்டும்.

இரண்டாவது தந்தியில் அநுமந்தர பஞ்சமத்தையும், மூன்றாவது தந்தியில் மந்தர ஷட்ஜத்தையும், நான்காவது தந்தியில் மந்தர மத்தியமத்தையும் அமைக்கவேண்டும்.

இனிக் கீழேயுள்ள மூன்று தந்திகளில் சுரங்களை யமைக்கும் முறை சொல்லப்படுகிறது.

முதல் தந்தி மத்திய ஷட்ஜத்திற்குச் சமமான ஒலியுடைய தாக இருக்கவேண்டும். இரண்டாவது தந்தி மந்தர பஞ்சம ஒலி பெற்றதாயும், மூன்றாவது தந்தி மந்தர ஷட்ஜ ஒலி பெற்ற தாயும் இருக்கவேண்டும்.

இம் மூன்று தந்திகளுக்கும் சுருதித் தந்திகள் என்று பெயர்.

இனி வைணிகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மெட்டுக் களின் அமைப்பு சொல்லப்படுகிறது.

முதலாவதான அநுமந்தர ஷட்ஜம் என்கிற தந்தியில் வரிசையாகச் சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சாதாரண காந்தாரம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், ச்யுத பஞ்சம மத்தியமம் என்கிற சுரங்கள் உண்டாவதற்காகக் கிரமமாக 1, 2, 3, 4, 5, 6 என ஆறு மெட்டுக்களை யமைக்க வேண்டும்.

இனி மற்ற மூன்று தந்திகளால் இந்த ஆறு மெட்டுக்களில் உண்டாகும் சுரங்களைச் சொல்லுவோம்.

இரண்டாவதான அநுமந்தர பஞ்சமம் என்கிற தந்தி யினுல் ஆறு மெட்டுக்களில் வரிசையாக சுத்த தைவதம், சுத்த நிஷாதம், கைசிக நிஷாதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம், சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம் என்கிற ஆறு சுரங்கள் மேற்கூறப் பட்ட ஆறு மெட்டுக்களில் வரிசையாக உண்டாகின்றன.

இந்த இரண்டாவது தந்தியினுல் உண்டாக்கப்பட்ட சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம் இவ்விரண்டும் மூன்றாவது தந்தியினுல் மந்தரங்களாக உண்டாக்கப்படுகின்றன. ஆகையால் இரண் டாவது தந்தியில் உண்டான அவைகள் பிரயோகத்தில் அறிய (உபயோகிக்கப்பட)த்தக்கனவல்ல.

அநுமந்தர சுரங்கள் சொல்லப்பட்டுவிட்டன. இனி மந்தர சுரங்களைச் சொல்லுவோம்.

மூன்றாவதான மந்தர ஷட்ஜத் தந்தியினால் அநுமந்தரத் தந்திபோலவே அதே ஆறு மெட்டுக்களில் வரிசையாக சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சாதாரண காந்தாரம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், ச்யுத பஞ்சம மத்தியமம் என்கிற ஆறு சுரங்கள் உண்டாகின்றன.

இந்த சுத்த மத்தியமும், ச்யுத பஞ்சம மத்தியமமும் மூன்றாவது தந்தியினால் உண்டாக்கப்பட்டபோதிலும் அவை களே நான்காவது தந்தியினாலும் உண்டாக்கப்படுவதால் பிரயோகத்தில் அறிய (உபயோக)ப்படாவாம்.

நான்காவதான மந்தர மத்தியம தந்தியினால் முன்சொன்ன ஆறு மெட்டுக்களில் வரிசையாக ச்யுத பஞ்சம மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம், கைசிக நிஷாதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்கிற சுரங்கள் உண்டாக்கப்படு கின்றன. இவைகளுக்கு மந்தர சுரங்கள் என்று பெயர்.

இவ்விதம் நான்கு தந்திகளால் முற்கூறிய ஆறு மெட்டுக் களிலும் அநுமந்தர சுரங்கள், மந்தர சுரங்கள் எல்லாம் கிரமமாக உண்டாக்கப்படுகின்றன.

சுரங்களுக்குப் பிரமாணம் ஏற்படுத்துவது

(சுயம்பூ சுரங்கள்)

மேலே சொல்லப்போகும் சுரங்கள் சுயம்பூ (தானே உண்டான) சுரங்களாகும். அவை சொந்த புத்தியினால் கற்பிக் கப்படவில்லை. அவைகளின் பிரமாணத்தை யறிவதற்கு ஒரு வழி காட்டப்படுகிறது.

எந்த இரண்டு சுரங்களுக்கு நடுவில் பன்னிரண்டு அல்லது எட்டு சுருதிகள் காணப்படுகின்றனவோ அவ்விரண்டு சுரங் களும் ஒன்றுக்கொன்று சம்வாதிகள் எனப்படும். அவற்றை எங்கும் சேர்க்கலாம். இது சங்கீத ரத்னாகரத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது.

சுரங்களுக்குப் பிரமாணத்தை ஏற்படுத்துவதற்கு இனி வேறொரு வழி சொல்லப்படுகிறது.

நான்காவது தந்தியினால் உண்டாக்கப்பட்ட சுத்தமான மந்தர பஞ்சமம், இரண்டாவது மெட்டில் சுயம்பூ என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இரண்டாவது மெட்டில் (எல்லாத் தந்தியினாலும்,) உண்டாக்கப்பட்ட சுரங்கள் எல்லாம் சுயம்பூ சுரங்களாகும். சுயம்பூக்கள் பிரமாணத்தை ஒட்டி ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் வேறுவிதமாக இருக்க மாட்டா.

இரண்டாவது தந்தியினால் இரண்டாவது மெட்டில் உண்டான அநுமந்தர சுத்த நிஷாதம் நான்காவது தந்தியினால் நான்காவது மெட்டில் உண்டாக்கப்பட்ட மந்தர சுத்த நிஷாதம் (ஒரே) பிரமாணத்தையுடையதாகச் செய்யப்படும் பொழுது நான்காவது மெட்டில் (நான்கு தந்திகளாலும்) உண்டாக்கப்பட்ட சுரங்கள் எல்லாம் பிரமாணங்களுடன் கூடிய சுயம்பூ சுரங்களாகும். எவராலும் (அவற்றை) வேறு விதமாகச் செய்யமுடியாது.

இரண்டாவது தந்தியினால் நான்காவது மெட்டில் உண்டாக்கப்பட்ட அநுமந்தர ச்யுத ஷட்ஜ நிஷாதம் நான்காவது தந்தியினால் ஆறாவது மெட்டில் உண்டாக்கப்பட்ட மந்தர ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்கிற சுரத்துடன் ஒத்திருப்பதால் ஆறாவது மெட்டில் (எல்லாத் தந்திகளாலும்) உண்டாக்கப்பட்ட சுரங்கள் எல்லாம் பிரமாணத்துடன் கூடிய சுயம்பூ சுரங்களாகும். அவைகளை வேறுவிதமாக மாற்றமுடியாது.

ஐந்தாவது மெட்டில் முதல் மூன்று தந்திகளால் ஷட்ஜமும் மத்தியமும் உண்டாவதால் அவற்றிலிருந்துண்டான பிரிவினைகளும் சுயம்பூக்களாகும்.

ஐந்தாவது மெட்டில் நான்காவது தந்தியினால் உண்டாக்கப்பட்ட மந்தர கைசிக நிஷாதம் மூன்றாவது மெட்டில் இரண்டாவது தந்தியினால் உண்டாக்கப்பட்ட அநுமந்தர கைசிக நிஷாதம் என்கிற சுரத்துடன் ஒத்திருப்பதால் அதிலிருந்து

உண்டான எல்லாச் சுரங்களும் (மூன்றாவது மெட்டில் எல்லாத் தந்திகளாலும் உண்டாக்கப்பட்ட சுரங்கள் எல்லாம்) சுயம்பூக்களாகும்.

மூன்றாவது மெட்டில் நான்காவது தந்தியினால் உண்டாக்கப்பட்ட மந்தர சுத்த தைவதம் முதல் மெட்டில் இரண்டாவது தந்தியினால் உண்டாக்கப்பட்ட அநுமந்தர சுத்த தைவதம் என்கிற சுரத்துடன் ஒத்திருப்பதால் உண்டான எல்லாச் சுரங்களும் பிரமாணமுள்ளவைகளாக ஆகின்றன.

இவ்விதம் ஆறு மெட்டுக்களிலும் உண்டாகும் சுரங்களின் பிரமாணத்தை நிர்ணயிப்பதற்காக இம்முறையானது ராமாமாத்தியரால் காட்டப்பட்டது.

இந்த சுரப்பிரமாணத்தைக்கொண்டே பண்டிதர்களால் மத்தியதாரம் அநுதாரம் என்கிற ஸ்தானங்களிலும் மெட்டுக்கள் உசிதப்படி வைக்கப்படவேண்டும்.

நான்காவது தந்தியினால் மத்தியம் முதலிய ஸ்தானத்தின் மெட்டுக்களில் உண்டான சுரங்களே பிரயோகத்தில் அறிய (உபயோக)ப்படுகின்றன. மற்ற மூன்று தந்திகளிலும் உண்டான சுரங்கள் அறிய (உபயோக)ப்படவில்லை.

ஆட்சேபம்:—உம்மால் முதலில் எல்லாச் சுரங்களும் பதினான்கு என்று சொல்லப்பட்டன (ஆனால்) இப்பொழுது பன்னிரண்டு சுரங்களுக்குத்தான் மெட்டுக்களின் அமைப்பைச் சொல்லியிருக்கிறீர். காகலி நிஷாதம், அந்தர காந்தாரம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக இரண்டு மெட்டுக்களின் அமைப்பை ஏன் சொல்லவில்லை.

சமாதானம்:—இதோ சொல்கிறோம். காகலி (நிஷாதம்) அந்தர (காந்தார)ம் இவைகளை உண்டுபண்ணுவதற்காக (அதிகப்படியாக) இரண்டு மெட்டுக்களை வைத்தால் அப்பொழுது சங்கீர்ணபாவத்துடன் (கலப்பு சுரங்களுடன்) வாசிக்கும்படி நேரிடுவதால் காதுக்கு அநுகூலமான ஒலி ஏற்படாது. ஆகையால் தனியாக அவைகளுக்கு மெட்டுக்கள் சொல்லப்படவில்லை. ஆனால் அவைகள் உண்டாகும் முறையானது சொல்லப்படுகிறது.

ச்யுத மத்தியம காந்தார மெட்டிலேயே காகலி நிஷாதத்தை உண்டாக்கலாம் என்று கானத்தை யறிந்தவர்கள் கூறுகின்றனர். அம்மாதிரியே காகலி (நிஷாதம்) அந்தர (காந்தார)ம் இவைகளையுடைய ராகங்கள் எல்லாம் உண்டாகின்றன.

இலக்கியத்தையே கடைப்பிடிக்கும் சில வித்துவான்கள் ஒலியின் வித்தியாசம் மிகவும் கொஞ்சமாகவிருப்பதால் ச்யுத மத்தியம காந்தாரமும், ச்யுத ஷட்ஜ நிஷாதமும் கிரமமாக அந்தர காந்தாரம், காகலி நிஷாதம் இவைகளின் ஸ்தானத்தில் பிரதிநிதிகளாக வரும் என்கிறார்கள்.

இதை எண்ணித்தான் சார்ங்கசூரியும், காகலி நிஷாதமும் அந்தர காந்தாரமும் எல்லாவிடங்களிலும் மிக அல்பமாக (அபூர்வமாக) உபயோகிக்கப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்.

இவ்விதம் இலக்கியத்தையறிந்தவர்களின் கொள்கைப்படி சுத்த மேள வீணையின் இலக்கணம் சொல்லப்பட்டது.

சுத்த மேள வீணை இவ்வாறும்.

(மத்தியமேள வீணை)

இனி மத்திய மேள வீணையின் இலக்கணம் விளக்கமாகச் சொல்லப்படுகிறது. முற்கூறிய சுத்த மேள வீணையில் மேலே முதல் தந்தி அநுமந்தர பஞ்சமத்தை உடையதாகவும், இரண்டாவது தந்தி மந்தர ஷட்ஜத்தை உடையதாகவும், மூன்றாவது தந்தி மந்தர பஞ்சமத்தை உடையதாகவும், நான்காவது தந்தி மத்திய ஷட்ஜத்தை உடையதாகவும் இருந்தால் அது மத்திய மேள வீணை ஆகும்.

பக்கத்திலுள்ள மூன்று தந்திகளும் மேல் தந்திகளுக்குச் சமமான சுருதியை உடையவைகளாக இருக்கவேண்டும்.

(அச்சுதராஜ மேள வீணை)

இனி அச்சுதராஜ மேள வீணை விளக்கப்படுகிறது. சுத்த மேள வீணையில் மேலே உள்ள நான்காவது தந்தி மந்தர பஞ்சமத்துடன் கூடியதாயும், மற்ற தந்திகள் முன்போலவும் இருந்தால் அஃது அச்சுதராஜ மேள வீணையாகும். பக்கத்திலுள்ள தந்திகளுடன் மத்திய பஞ்சமத்தையுடைய ஒரு தந்தி அதிகப்படியாகச் சேர்க்கப்படவேண்டும்.

இராமாமாத்தியருடைய வீணையின் அமைப்பு.

1. சுத்த மேள வீணை

எண்.	மேல் தந்திகளின் பெயர்கள்.	மெட்டுக்கள்.					
		1	2	3	4	5	6
1	அநுமந்தர ஷட்ஜம்	சுத்த ரிஷபம்	சுத்த காந்தாரம்	சாதாரண காந்தாரம்	ச்யுத மத்தியம காந்தாரம்	சுத்த மத்தியமம்	ச்யுத பஞ்சம மத்தியமம்
2	அநுமந்தர பஞ்சமம்	சுத்த தைவதம்	சுத்த நிஷாதம்	கைசிகி நிஷாதம்	ச்யுத ஷட்ஜ நிஷாதம்	சுத்த ஷட்ஜம்	சுத்த ரிஷபம்
3	மந்தர ஷட்ஜம்	சுத்த ரிஷபம்	சுத்த காந்தாரம்	சாதாரண காந்தாரம்	ச்யுத மத்தியம காந்தாரம்	சுத்த மத்தியமம்	ச்யுத பஞ்சம மத்தியமம்
4	மந்தர மத்தியமம்	ச்யுத பஞ்சம மத்தியமம்	சுத்த பஞ்சமம்	சுத்த தைவதம்	சுத்த நிஷாதம்	கைசிகி நிஷாதம்	ச்யுத ஷட்ஜ நிஷாதம்

பக்கத்திலுள்ள மூன்று சுருதித் தந்திகளின் பெயர்கள்.

(1) மத்திய ஷட்ஜம்.
(2) மந்தர பஞ்சமம்.
(3) மந்தர ஷட்ஜம்.

2. மத்திய மேள வீணை.

மேலே உள்ள நான்கு தந்திகளின் பெயர்கள்.

(1) அநுமந்தர பஞ்சமம்.
(2) மந்தர ஷட்ஜம்.
(3) மந்தர பஞ்சமம்.
(4) மத்திய ஷட்ஜம்.

பக்கத்திலுள்ள மூன்று சுருதித் தந்திகளின் பெயர்கள் சுத்த மேள வீணைக்குச் சொன்னவைகளே.

3. அச்சுதராஜேந்திர மேள வீணை.

மேலே உள்ள நான்கு தந்திகளின் பெயர்கள்.

(1)	அநுமந்தர ஷட்ஜம்	முதல் மூன்று தந்திகளும் சுத்த மேள வீணையின் தந்திகள் போலவே உள்ளன.
(2)	அநுமந்தர பஞ்சமம்	
(3)	மந்தர ஷட்ஜம்	

(4) மந்தர பஞ்சமம்.

பக்கத்தில் இதற்கு நான்கு சுருதித் தந்திகள் உண்டு. அவைகளின் பெயர்கள்.

(1) மத்திய பஞ்சமம். இது ஒன்று அதிகப்படியான தந்தி.
(2) மத்திய ஷட்ஜம்.
(3) மந்தர பஞ்சமம்.
(4) மந்தர ஷட்ஜம்.

பன்னிரண்டு சுரங்கள்,

ச்யுத மத்தியம காந்தாரமும், ச்யுத ஷட்ஜ நிஷாதமும், அந்தர காந்தாரம், காகலி நிஷாதம் இவைகளின் ஸ்தானங்களில் பிரதிநிதிகளாக வருவதால் பிரகிருதி, விகிருதி சுரங்கள் எல்லாம் சேர்ந்து மொத்தம் பன்னிரண்டே என்பது ராமாமாத்தியரின் முடிவான கொள்கை. அதன்படி சுரங்களின் பெயர்கள் பின்வருமாறு:—

(1) சுத்த ஷட்ஜம்.
(2) சுத்த ரிஷபம்.
(3) சுத்த காந்தாரம்.
(4) சாதாரண காந்தாரம்.
(5) ச்யுத மத்தியம காந்தாரம்.
(6) சுத்த மத்தியமம்.
(7) ச்யுத பஞ்சம மத்தியமம்.
(8) சுத்த பஞ்சமம்.
(9) சுத்த தைவதம்.
(10) சுத்த நிஷாதம்.
(11) கைசிகி நிஷாதம்.
(12) காகலி நிஷாதம்.

இவ்விதம் அபிநவபரதாச்சாரியாரும் வாக்கேயகாரரும் தோடரமல்ல திம்மாமாத்தியரின் குமாரருமான இராமாமாத்தியரால் செய்யப்பட்ட சுரமேளகலாநிதியில் மூன்றாவதான வீணைப்பிரகரணம் முற்றிற்று.

மேளப்பிரகரணம்—4

இவ்விதம் மூன்று விதமான வீணைகளின் இலக்கணம் விரிக்கப்பட்டது. இனி அந்தந்த தேசபாஷையில் பிரசித்தமான ராகத்தின் பெயரால் குறிப்பிடப்பட்டவைகளும், அந்தந்த ராகங்களுக்கு முக்கியமானவைகளுமான மேளங்களை வரிசையாகச் சொல்லுவோம். முதலில் ராகங்களின் பெயர்களைச் சொல்லிவிட்டுப் பிறகு அவைகளின் இலக்கணத்தைச் சொல்லுவோம்.

எல்லா ராக மேளங்களுக்குள்ளும் முகாரி மேளம் முதலாவது. பிறகு மாளவகௌள மேளம், ஸ்ரீராக மேளம், சாரங்கநாட மேளம், ஹிந்தோள மேளம், சுத்தராமக்கிரியா மேளம், தேசாட்சி மேளம், கன்னடகௌள மேளம், சுத்தநாடி மேளம், ஆஹரி மேளம், நாதராமக்கிரியா மேளம், சுத்தவராளி மேளம், ரீதிகௌள மேளம், வசந்தபைரவி மேளம், கேதார கௌள மேளம், ஹெஜ்ஜுஜ்ஜி மேளம், சாமவராளி மேளம், ரேவகுப்தி மேளம், சாமந்த மேளம், காம்போஜி மேளம் என்பவைகளாம். ஆக மொத்தம் மேளங்கள் இருபதே. அவைகளின் இலக்கணம் இனிச் சொல்லப்படும்.

மேளங்களின் பெயர்க் குறிப்பு இவ்வாறும்.

(1. முகாரி மேளம்)

சுத்தமான ஏழு சுரங்களையும் உடையது முகாரி மேளம் எனப்படும். இந்த மேளத்தில் முகாரி ராகமும், சில கிராம ராகங்களும் சுத்தமானவை என்று சார்ங்கதேவ பண்டிதரால் சொல்லப்படுகிறது.

(2. மாளவ கௌள மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், ச்யுதமத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்ததைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்னும் இந்த ஏழு சுரங்களுடன் கூடியது மாளவ கௌள மேளம் என்று ராகத்தை யறிந்தவர்களின் கொள்கைப்படி ராமாமாத்தியரால் சொல்லப்பட்டது.

இம்மேளத்தில் உண்டாகிற ராகங்களைக் கூறுவேன். மாளவகௌளம், லலிதா, பௌளி, சௌராஷ்டிரம், கூர்ஜரி, மேசபௌளி, பலமஞ்சரி, குண்டக்கிரி, சிந்துராமக்கிரி, சாயா கௌளம், குரஞ்சி, கன்னட பங்காளம், மங்கள கைசிகம், மலஹரி முதலிய சில ராகங்கள் இதிலிருந்து உண்டாகின்றன.

(3. ஸ்ரீராக மேளம்)

சுத்த ஷட்ஜம், பஞ்சசுருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதி தைவதம், கைசிக நிஷாதம் இந்த ஏழு சுரங்களுடன் கூடியது ஸ்ரீராக மேளம்.

இந்த மேளத்தில் உண்டாகும் ராகங்களைக் கூறுவேன். ஸ்ரீராகம், பைரவி, கௌளி, தன்யாசி சுத்தபைரவி, வேளாவளி, மாளவஸ்ரீ, சங்கராபரணம், ஆந்தோளம், தேவகாந்தாரம், மத்தியமாதி என்னும் இவை முதலிய சில ராகங்கள் இம்மேளத்திலிருந்து உண்டாகின்றன.

(4. சாரங்கநாட மேளம்)

சுத்த ஷட்ஜம், பஞ்சசுருதி ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதிதைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் இந்த ஏழு சுரங்களுடன் கூடியது சாரங்கநாட மேளம் என ராமாமாத்தியரால் சொல்லப் பட்டது.

இம்மேளத்திலிருந்து உண்டாகும் சில ராகங்களைச் சொல் லுகிறேன். சாரங்க நாடம், சாவேரி, சாரங்க பைரவி, நட்ட நாராயணி, சுத்த வசந்தம், பூர்வகௌளம், குந்தளவராளி, பின்ன ஷட்ஜம், நாராயணி முதலிய சில ராகங்கள் இதிலிருந்து உண்டாகின்றன.

(5. ஹிந்தோள மேளம்)

ஸ்ரீராக மேளத்திற்குச் சொன்ன இலக்கணமே இதற்கும் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் தைவதம் மட்டும் சுத்த தைவதமாகவே இருக்கும். இதுதான் ஹிந்தோள மேளத்தில் விசேஷம்.

இம்மேளத்திலிருந்து உண்டானவைகளும், இலக்கணத்திற்குப் பொருந்தினவைகளுமான சில ராகங்களைக் கூறுவேன். ஹிந்தோளம், மார்க்க ஹிந்தோளம், பூபாளம் என இவையும், வேறு சில ராகங்களும் இம்மேளத்திலுண்டாகின்றன.

(6. சுத்தராமக்கிரியா மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், ச்யுத பஞ்சம மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்ற இந்த ஏழு சுரங்களையும் கொண்டது சுத்த ராமக்கிரியா மேளமாகும்.

இம்மேளத்திலுண்டாம் ராகங்களைக் கூறுவேன். சுத்த ராமக்கிரியை, பாடி, ஆர்த்திர தேசி, தீபகம் இவை முதலிய சில ராகங்கள் இம்மேளத்திலுண்டாகின்றன.

(7. தேசாட்சி மேளம்)

சுத்த ஷட்ஜம், ஷட்சுருதி ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்தமத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதி தைவதம், ச்யுதஷட்ஜ நிஷாதம் என்ற இவ்வேழு சுரங்களுடன் கூடியது தேசாட்சி மேளம் என்று புத்திமானான ராமாமாத்தியரால் கூறப்பட்டது.

தேசாட்சி ராகம் முதலிய ராகங்கள் சிற்சில விடங்களில் இம்மேளத்திலிருந்து உண்டாகின்றன.

(8. கன்னட கௌள மேளம்)

தேசாட்சி மேளத்திற்குச் சொன்ன இலக்கணத்திலிருந்து கன்னட கௌள மேளத்திற்கு ஒரு வேறுபாடு மட்டும் உண்டு. (அதாவது) இலக்கியம் அறிந்தவர்களால் நிஷாதம் மட்டும் கைசிகிநிஷாதமாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கும் (என்று சொல்லப்படுகிறது. இதுவே கன்னட கௌள மேளத்தின் இலக்கணம்.)

இம்மேளத்தில் உண்டாகிற சில ராகத்தைக் கூறுவேன். கன்னட கௌளம், கண்டாரவம், சுத்தபங்காளம், சாயா நாடம், துருஷ்கதோடி, நாகத்துவனி, தேவக்கிரியா முதலிய சில ராகங்கள் இதிலிருந்து உண்டாகின்றன.

(9. சுத்தநாடி மேளம்)

சுத்த ஷட்ஜம், ஷட்சுருதி ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், ஷட்சுருதி தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்ற இந்த ஏழு சுரங்களையும் கொண்டது சுத்தநாடி மேளமாகும்.

இம்மேளத்தில் சுத்தநாடி முதலிய ராகங்கள் உண்டாகின்றன.

(10. ஆஹரி மேளம்)

சுத்த ஷட்ஜம், பஞ்சசுருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம், என்ற இந்த ஏழு சுரங்களுடன் கூடியது ஆஹரி மேளமாகும்.

இம்மேளத்தில் ஆஹரி முதலிய ராகங்கள் உண்டாகின்றன.

(11. நாதராமக்கிரியா மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்ற இந்த ஏழு சுரங்களையும் கொண்டது நாதராமக்கிரியா மேளமாகும்.

இம்மேளத்தில் சிற்சில விடங்களில் நாதராமக்கிரியா முதலிய சில ராகங்கள் உண்டாகின்றன.

(12. சுத்தவராளி மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், ச்யுத பஞ்சம மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களையும் கொண்டது சுத்தவராளி மேளமாகும்

இம்மேளத்தில் சுத்தவராளி ராகமும், தேச சம்பந்தமான வேற்றுமைக்கேற்ப வேறு ராகங்களும் உண்டாகின்றன.

(13. ரீதிகௌளை மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதி தைவதம், கைசிகி நிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களையும் உடைய்து ரீதிகௌளை மேளமாகும்.

இம்மேளத்தில் ரீதிகௌளை முதலிய ராகங்கள் உண்டா கின்றன என்று கானத்தை யறிந்தவர்கள் கூறுகின்றனர்.

(14. வசந்த பைரவி மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், கைசிக நிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களுடன் கூடியது வசந்த பைரவி மேளமாகும்.

இதில் வசந்த பைரவி ராகம், சோம ராகம் முதலிய சில ராகங்கள் உண்டாகின்றன.

(15 கேதார கௌளை மேளம்)

சுத்த ஷட்ஜம், பஞ்சசுருதி ரிஷபம், ச்யுத மத்தியம காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதி தைவதம், ச்யுத ஷட்ஜ நிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களைக் கொண்டது கேதார கௌளை மேளம்.

கேதார கௌளை ராகம், நாராயண கௌளை ராகம் முதலிய சில ராகங்கள் இம்மேளத்தில் உண்டாகின்றன.

இதுகாறும் காகலிநிஷாதமும், அந்தர காந்தாரமும் இல்லாத பதினைந்து மேளங்கள் சொல்லப்பட்டன. இனிக் காகலிநிஷாதம், அந்தர காந்தாரம் இவைகளுடன் கூடிய ஐந்து மேளங்கள் சொல்லப்படுகின்றன.

(1. ஹேஜுஜ்ஜி மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களையும் கொண்டது ஹேஜுஜ்ஜி மேளமாகும்.

இம்மேளத்தில் ஹேஜுஜ்ஜி முதலிய ராகமும், சில கிராம ராகங்களும் உண்டாகின்றன. காந்தருவம் என்கிற இசையைச் சேர்ந்ததும் ஐந்து (தனி) மேளங்களில் ஒன்றானதுமான இம் மேளம் சார்ங்கதேவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(2. சாமவராளி மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம் என்கிற இந்த ஏழு சுரங்களுடன் கூடியது சாமவராளி மேளம்.

இம்மேளத்தில் சாமவராளி, தோடி, பூர்வவராளி என்பவைகளும், சில கிராம ராகங்களும் மார்க்கம் என்கிற இசையையறிந்த சார்ங்கதேவரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(3. ரேவகுப்தி மேளம்)

சுத்த ஷட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்தியமம். சுத்த பஞ்சமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம் என்கிற ஏழு சுரங்களுடன் கூடியது ரேவகுப்தி மேளம் எனப்படும்.

இம்மேளத்தில் ரேவகுப்தி ராகமும், சில சுத்த ராகங்களும் உண்டாகின்றன என்று ரத்னாகரத்தில் சார்ங்கதேவரால் சொல்லப்பட்டிருக்கிறது.

(4. சாமந்த மேளம்)

சுத்த ஷட்ஜம். ஷட்சுருதி ரிஷபம். அந்தர காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம் என்கிற ஏழு சுரங்களுடன் கூடியது சாமந்த மேளமாகும்.

இம்மேளத்தில் சாமந்த ராகம் முதலிய ராகங்கள் உண்டாகின்றன.

(5. காம்போஜி மேளம்)

சுத்த ஷட்ஜம், பஞ்ச சுருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்தியமம், சுத்த பஞ்சமம், பஞ்சசுருதி தைவதம், காகலி நிஷாதம் என்கிற ஏழு சுரங்களுடன் கூடியது சாமந்த மேளமாகும்.

இம்மேளத்தில் காம்போஜி முதலிய ராகங்கள் உண்டாகின்றன.

இராமாமாத்தியரின் மேளங்களும் ஜன்யராகங்களும்

எண்.	மேளங்கள் இருபது (20)	ஜன்ய ராகங்கள்—அறுபத்துநான்கு (64)		
1	முகாரி	முகாரி ராகமும், சில கிராமராகங்களும்		
2	மாளவகௌளை	1. மாளவகௌளை	6. மேசபௌளி	11. குராஞ்சி
		2. லலிதா	7. பலமஞ்சரி	12. கந்நடபங்காளா
		3. பௌளி	8. குண்டக்கிரியா	13. மங்களகௌசிகி
		4. சௌராஷ்டிரம்	9. சிந்துராமக்கிரியா	14. மலஹரி
		5. கூர்ஜரி	10. சாயாகௌளை	முதலியவைகள்
3	ஸ்ரீராகம்	1. ஸ்ரீராகம்	5. சுத்தபைரவி	9. ஆந்தோளி
		2. பைரவி	6. வேளாவளி	10. தேவகாந்தாரி
		3. கௌளை	7. மாளவஸ்ரீ	11. மத்தியமாதி
		4. தன்யாசி	8. சங்கராபரணம்	முதலியவைகள்
4.	சாரங்கநாட	1. சாரங்கநாட	4. நடநாராயணி	7. குந்தளவராளி
		2. சாவேரி	5. சுத்தவசந்தா	8. பிங்கஷட்ஜம்
		3. சாலகபைரவி	6. பூர்வகௌளை	9. நாராயணி
				முதலியவைகள்
5	ஹிந்தோளம்	1. ஹிந்தோளம்	2. மார்க்கஹிந்தோளம்	3. பூபாளம் முதலியவைகள்
6	சுத்தராமக்கிரியா	1. சுத்தராமக்கிரியா	3. ஆர்த்திரதேசி	4. தீபகம்
		2. பாடிராகம்		
7	தேசாட்சி	தேசாட்சி		

8	கங்கடகௌளை	1. கங்கடகௌளை 4. சாயாநாட 7. தேவக்கிரியா 2. கண்டாரவம் 5. துருஷ்கதோடி முதலியவைகள் 3. சுத்தபங்காளா 6. நாகத்துவனி
9	சுத்தநாட	சுத்தநாட முதலியவைகள்
10	ஆஹரி	ஆஹரி முதலியவைகள்
11	நாதராமக்கிரியா	நாதராமக்கிரியா முதலியவைகள்
12	சுத்தவராளி	சுத்தவராளி முதலியவைகள்
13	ரீதிகௌளை	ரீதிகௌளை முதலியவைகள்
14	வசந்தபைரவி	1. வசந்தபைரவி 2. சோமராகம் முதலியவைகள்
15	கேதாரகௌளம்	1. கேதாரகௌளம் 2. நாராயண கௌளம்
16	ஹேஜுஜ்ஜி	ஹேஜுஜ்ஜியும் சில கிராமராகங்களும்
17	சாமவராளி	சாமவராளியும் சில கிராமராகங்களும்
18	ரேவகுப்தி	ரேவகுப்தியும் சில கிராமராகங்களும்
19	சாமந்தம்	சாமந்தம் முதலிய ராகங்கள்
20	காம்போஜி	காம்போஜி முதலிய ராகங்கள்

(மேளங்களின் எண்ணிக்கை)

இவ்விதம் இருபது மேளங்களின் இலக்கணம் கூறப்பட்டது. இவைகள் காத்திரத்தில் (கண்டத்தில்) நிச்சயமாக வரும். இனி வீணையில் இலக்கியத்திற்குச் சம்மதமான இரண்டு பட்சங்கள் கூறப்படும்.

(முதல் பட்சம்.) அந்தர காந்தாரம், காகலி நிஷாதம் என்கிற சுரங்களையும் தனித்தனியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது முதல் பட்சம். இதில் மேளங்கள் இருபதும் நிச்சயமாக வரும்.

(இரண்டாவது பட்சம்.) அந்தர காந்தாரத்திற்குப் பிரதிநிதியாக ச்யுதமத்தியம காந்தாரத்தையும், காகலி நிஷாதத்திற்குப் பிரதிநிதியாக ச்யுத ஷட்ஜ நிஷாதத்தையும் எடுத்துக் கொள்ளுதல் இரண்டாவது பட்சமாகும். இதில் மேளங்கள் பதினைந்தே வருகின்றன. எஞ்சிய ஐந்து மேளங்களும் இப் பதினைந்தில் அடங்கியே இருக்கின்றன. அதை இங்கு விளக்குவோம்.

வசந்தபைரவி மேளத்தில் ஹேஜுஜ்ஜி மேளம் அடங்கி விட்டது. அதுபோலவே சுத்தவராளி மேளத்தில் சாமவராளி மேளமும், பௌளி மேளத்தில் ரேவகுப்தி மேளமும், கன்னட கௌள மேளத்தில் சாமந்த மேளமும், சாரங்கநாட மேளத்தில் காம்போஜி மேளமும் அடங்கியிருக்கின்றன.

இவ்விதம் பிரதிநிதிகளை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் முகாரி மேளம் தொடங்கி, கேதார கௌள மேளம் முடிய மொத்தம் மேளங்கள் பதினைந்தே என்று சித்திக்கின்றன.

இவ்விதம் அபிநவபரதாச்சாரியரும், வாக்கேயகாரரும்
தோடரமல்லதிம்மாமாத்தியரின் குமாரருமான
இராமாமாத்தியரால் செய்யப்பட்ட சுரமேளகலாநிதியில்
நான்காவதான மேளப்பிரகரணம் முற்றிற்று.

இராகப்பிரகரணம்—5

இந்த மேளங்களில் உண்டான ராகங்கள் உத்தமம் மத்தியமம், அதமம் என மூன்று வகைப்படும்.

(உத்தம ராகங்கள்)

பின்வரும் இருபது ராகங்கள் கலப்பற்றவைகளாயும், கீதம், பிரபந்தம், ஆலாபம், டாயம் என்பவைகளைப் பாடுவதற்கு யோக்கியமாகவும் இருப்பதால் உத்தமோத்தம ராகங்கள் எனப்படுகின்றன.

1. முகாரி,
2. சுத்தநாடி,
3. மாளவகௌளை,
4. சுத்தவராளி,
5. கூர்ஜரி,
6. லலிதம்,
7. சுத்தராமக்கிரியா,
8. சுத்தவசந்தம்,
9. பைரவி,
10. ஹிந்தோளம்,
11. ஸ்ரீராகம்,
12. கன்னடகௌளை,
13. சாமந்தம்,
14. தேசாட்சி,
15. தன்யாசி,
16. பௌளி,
17. ஆஹரி,
18. மலஹரி,
19. மாளவஸ்ரீ,
20. சாரங்கநாடம்.

(மத்தியமராகங்கள்)

பின்வரும் பதினைந்து ராகங்கள் பிரபந்தத்தின் கண்டங்களைப் (பகுதிகளை)பாட உபயோகமுள்ளவைகளாயும், சொற்பமான பிரயோகத்தையுடையவைகளாயும், மத்தியமங்களாயுமிருக்கின்றன.

1. கேதாரகௌளம்,
2. காம்போஜி,
3. கன்னடபங்காளா,
4. வேளாவளி,
5. மத்யமாதி,
6. நாரணி,
7. ரீதிகௌளை,
8. நாதராமக்கிரியை,
9. பாடி,
10. பூபாளம்,
11. ரேவகுப்தி,
12. குண்டக்கிரியா,
13. ஹேஜுஜ்ஜி,
14. வசந்த பைரவி,
15. சாமவராளி,

(அதம ராகங்கள்)

பின்வரும் ராகங்கள் அதமராகங்கள்:—

1. சௌராஷ்டிரம்,
2. மேசபௌளி,
3. சாயாகௌளம்,
4. குரஞ்சி,
5. சிந்துராமக்கிரியா,
6. கௌடி,
7. தேசி,
8. மங்கள கைசிகி,
9. பூர்வகௌளம்,
10. சோமராகம்,
11. ஆந்தோளம்,
12. பலமஞ்சரி,
13. சங்கராபரணம்,
14. தேவகாந்தாரி,
15. தீபகம்,
16. நட்டநாராயணி,
17. சுத்த பைரவி,
18. பின்ன ஷட்ஜம்,
19. குந்தளவராளி,
20. சாரங்கபைரவி,
21. சுத்த பங்காளம்,
22. நாகத்துவனி,
23. கண்டாரவம்,
24. மார்க்க ஹிந்தோளம்,
25. சாயாநாடி,
26. தேவக்கிரியா,
27. நாராயணி,
28. கௌளராகம்,
29. தோடி,
30. வராளி,
31. துருஷ்கதோடி,
32. சாவேரி,
33. ஆர்த்திரதேசி,

இவை முதலிய ராகங்கள் கிரமமாக அதமங்களாம்.

முன் சொன்ன உத்தம ராகங்கள் மத்தியம ராகங்கள் என்பவைகளில் அடங்கியுள்ள இந்தக் கலப்பு (அதம) ராகங்கள் பாமரர்களை மயக்குகின்றவைகளாக இருக்கின்றன. இவைகள் டாயம், ஆலாபம், பிரபந்தம் முதலியவைகளுக்குத் தகுதியற்றனவாகும், ஆகையால் இசையை அறிந்தவர்கள் இவைகளை ஆதரிக்கமாட்டார்கள்.

மேளராகங்களின் இலக்கணங்கள்

எண்.	மேளம்	கிரஹம்	அம்சம்	நியாசம்	பாட வேண்டிய காலம்	சுரங்கள்: ச சுத்தம்	ரி சுத்தம்	ரி பஞ்சசுருதி	ரி ஷட்சுருதி	க சுத்தம்	க சாதாரணம்	க அந்தரம்	க ச்யுத மத்தியமம்	ம சுத்தம்	ம ச்யுத பஞ்சமம்	ப சுத்தம்	த சுத்தம்	த பஞ்சசுருதி	த ஷட்சுருதி	நி சுத்தம்	நி கைசிகி	நி காகலி	நி ச்யுதஷட்ஜம்	பிரிவு	பிரிவுகளின் காரணம்	விசேஷங்கள்
1	முகாரி	ச	ச	ச	எப்பொழுதும்	ச	ரி	—	—	க	—	—	—	ம	—	ப	த	—	—	நி	—	—	—	உ ச		
2	மாளவ கௌளை	நி	நி	நி	மாலை	ச	ரி	—	—	—	—	—	க	ம	—	ப	த	—	—				நி	உ ஔ	சிலசமயம் ரி ப கிடையாது	ராகங்களுள் மிகவும் உத்தமம்
3	ஸ்ரீராகம்	ச	ச	ச	மாலை	ச	—	ரி	—	—	க	—	—	ம	—	ப	—	த	—	—	நி	—	—	உ ஔ	சிலசமயம் க த கிடையாது	
4	சாரங்கநாட	ச	ச	ச	முன்பகல்	ச	—	ரி	—	—	—	—	க	ம	—	ப	—	த	—	—	—	—	நி	உ ச		
5	ஹிந்தோளம்	ச	ச	ச	எப்பொழுதும்	ச	—	ரி	—	—	க	—	—	ம	—	ப	த	—	—	—	நி	—	—	உ ஔ	சிலசமயம் ரி த கிடையாது	
6	சுத்தராமக்கிரியா	ச	ச	ச	பிற்பகல்	ச	ரி	—	—	—	—	—	க	—	ம	ப	த	—	—	—	—	—	நி	உ ச		
7	தேசாட்சி	ச	ச	ச	பிற்பகல்	ச	—	—	ரி	—	—	—	க	ம	—	ப	—	த	—	—	—	—	நி	உ ச	ஆரோஹணத்தில் ம நி கிடையாது	

எண்	மேளம்	கிரஹம்	அம்சம்	நியாசம்	பாட வேண்டிய காலம்	சுரங்கள் ச சுத்தம்	ரி சுத்தம்	ரி பஞ்சசுருதி	ரி ஷட்சுருதி	க சுத்தம்	க சாதாரணம்	க அந்தரம்	க ச்யுத மத்யமம்	ம சுத்தம்	ம ச்யுத பஞ்சமம்	ப சுத்தம்	த சுத்தம்	த பஞ்சசுருதி	த ஷட்சுருதி	நி சுத்தம்	நி கைசிகி	நி காகலி	நி ச்யுத ஷட்ஜம்	பிரிவு	பிரிவுகளின் காரணம்	விசேஷங்கள்
8	கந்நட கௌளை	நி	நி	நி	கடைசி யாமம்	ச	—	—	ரி	—	—	—	க	ம	—	ப	—	த	—	—	நி	—	—	உ ச	ஆரோ கணத்தில் த கிடையாது	உத்கல தேசத்தில் விரும்பப் படுகிறது
9	சுத்தநாடி	ச	ச	ச	பின்யாமம்	ச	—	—	ரி	—	—	—	க	ம	—	ப	—	—	த	—	—	—	நி	உ ச		
10	ஆகிரி	ச	ச	ச	கடைசி யாமம்	ச	—	ரி	—	—	க	—	—	ம	—	ப	த	—	—	—	—	—	நி	உ ச		
11	நாதராமக் கிரியா	ச	ச	ச	தினத்தின் நான்காவது யாமம்	ச	ரி	—	—	—	க	—	—	ம	—	ப	த	—	—	—	—	—	நி	ம ச		
12	சுத்தவராளி	ச	ச	ச	எப்பொழுதும்	ச	ரி	—	—	க	—	—	—	—	ம	ப	த	—	—	—	—	—	நி	உ ச		
13	ரீதிகௌளை	நி	நி	நி	மாலை	ச	ரி	—	—	க	—	—	—	ம	—	ப	—	த	—	—	நி	—	—	ம ச		முகாரி மேளத்தை ஒத்திருக் கிறது
14	வசந்தபைரவி	ச	ச	ச	காலை	ச	ரி	—	—	—	—	—	க	ம	—	ப	த	—	—	—	நி	—	—	மஷா	ப கிடையாது	
15	கேதார கௌளம்	நி	நி	நி	தினத்தின் நான்காவது யாமம்	ச	—	ரி	—	—	—	—	க	ம	—	ப	—	த	—	—	—	—	நி	ம ச		

16	ஹேஜுஜ்ஜி	ம	ம	ம	முன்பகல்	ச	ரி	—	—	—	—	க	—	ம	—	ப	த	—	—	—	—	நி	—	ம ச		
17	சாமவராளி	ச	ச	ச	எப்பொழுதும்	ச	ரி	—	—	க	—	—	—	ம	—	ப	த	—	—	—	—	நி	—	ம ச		சாமவேதத்திலிருந்து உண்டாயிற்று
18	ரேவகுப்தி	ரி	—	ரி	கடைசி யாமம்	ச	ரி	—	—	—	—	க	—	ம	—	ப	த	—	—	நி	—	—	—	ம ஔ	ம நி — கிடையாது	
19	சாமந்தம்	ச	ச	ச	கடைசி யாமம்	ச	—	—	ரி	—	—	க	—	ம	—	ப	—	—	த	—	—	நி	—	உ ச		
20	காம்போஜி	ச	ச	ச	மாலை	ச	—	ரி	—	—	—	க	—	ம	—	ப	—	த	—	—	—	நி	—	ம ச	ஆரோகணத்தில் ம நி கிடையாது	

குறிப்பு :— உ ச = உத்தம சம்பூர்ணம்
உ ஷா = உத்தம ஷாடவம்
உ ஔ = உத்தம ஔடுவம்
ம ச = மத்தியம சம்பூர்ணம்
ம ஷா = மத்தியம ஷாடவம்
ம ஔ = மத்தியம ஔடுவம்
அ ச = அதம சம்பூர்ணம்
அ ஷா = அதம ஷாடவம்
அ ஔ = அதம ஔடுவம்

(இராகங்களின் இலக்கணம்)

தேசி ராகங்கள் எல்லாம் ஷட்ஜக்ராமத்தில் உண்டானவைகள். அவைகள் கிரஹம், அம்சம், நியாசம், மந்தரம் முதலியவைகளையுடையவைகளாகவும், ஷாடவம், ஔடுவம், சம்பூர்ணம் என்ற மூன்று பிரிவுகளில் அடங்கியவைகளாகவும் இருக்கும்.

இவைகள் தேசிராகங்களாக விருப்பதால் எல்லா ராகங்களிலும் (மூன்று பிரிவுகளிலும்) வந்தாலும், வராவிடினும் இலக்கியத்தையனுசரித்தும், இசையின் இலக்கணத்தையொட்டியும் கலப்பற்ற இருபது உத்தம ராகங்களின் இலக்கணத்தையும், பதினைந்து மத்தியம ராகங்களின் இலக்கணத்தையும், சில அதம ராகங்களின் இலக்கணத்தையும் சொல்லுவோம்.

1. உத்தம சப்பூர்ண ராகங்கள்—10

(1. நாடி ராகம்)

சம்பூர்ணமான சுரங்களையுடையதாகவும், ஷட்ஜத்தையே நியாசம், கிரஹம், அம்சம் இவைகளாக உடையதாகவும், கடைசி யாமத்தில் பாடத்தகுந்ததாகவும் உள்ள ராகம் நாடி ராகம் எனப்படும்.

(2. வராளி ராகம்)

ஷட்ஜத்தையே அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாகவும், சம்பூர்ணமான சுரங்களையுடையதாகவும், எல்லா யாமங்களிலும் பாடத்தகுந்ததாகவும் உள்ளது வராளி ராகம் எனப்படும்.

(3. சாரங்கநாடி ராகம்)

ஷட்ஜத்தையே நியாசம், கிரஹம், அம்சம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், கடைசி யாமத்தில் பாடத் தகுந்ததுமாகிய ராகம் சாரங்கநாடி ராகமாகும்.

(4. சுத்த ராமக்கிரியா ராகம்)

ஷட்ஜத்தையே ந்யாசம், கிரஹம், அம்சம் இவைகளாகக் கொண்டதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், நடுப் பகலுக்குமேல் பாடத்தகுந்ததுமான ராகம் சுத்தராமக்கிரியா ராகமாகும்

(5. முகாரி ராகம்)

ஷட்ஜத்தையே கிரஹம், ந்யாசம், அம்சம் இவைகளாகக் கொண்டதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், எல்லாக் காலங்களிலும் பாடத்தகுந்ததுமான ராகம் முகாரிராகமாகும்.

(6. பைரவி ராகம்)

ஷட்ஜத்தையே ந்யாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், தினத்தின் கடைசி யாமத்தில் பாடத் தகுந்ததுமான ராகம் பைரவி ராகமாகும்.

(7. ஆகிரி ராகம்)

ஷட்ஜத்தையே ந்யாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும் வல்லவர்களால் கடைசி யாமத்தில் பாடத்தகுந்ததுமான ராகம் ஆகிரி ராகமாகும்

(8. சாமந்தராகம்)

ஷட்ஜத்தையே அம்சம், ந்யாசம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும் தினத்தின் கடைசி யாமத்தில் பாடத்தகுந்ததுமான ராகம் சாமந்த ராகமாகும்.

(9. கன்னடகௌள ராகம்)

நிஷாதத்தையே ந்யாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், சில சமயங்களில் ஆரோஹத்தில் தைவதம் விடுபட்டதும் உத்கல (ஓரிஸா) தேசத்தவர்களுக்கு மிகவும் பிரியமானதும், தினத்தின் கடைசி யாமத்தில் பாடத்தகுந்ததுமான ராகம் கன்னடகௌள ராகம் எனப்படும்.

(10. தேசாக்ஷிராகம்)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், ஆரோஹத்தில் மட்டும் ம, நி இவைகளற்றதும் மூன் யாமத்தில் பாடத் தகுந்ததுமான ராகம் தேசாக்ஷிராகம்.

உத்தம சம்பூர்ண ராகங்கள் பத்தும் இவ்வாறும்.

2. உத்தம ஷாடவ ராகங்கள்—5

(1. பௌளி)

மத்தியமத்தையே அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாயும், பஞ்சமம் இல்லாததால் ஷாடவமானதாயும் தினத்தின் முதல் பாகத்தில் பாடத்தகுந்ததாயுமுள்ள ராகம் பௌளிராகமாகும்.

(2. சுத்தவசந்தம்)

ஷட்ஜத்தையே அம்சமாகவும், கிரஹமாகவும் உடையதாயும், பஞ்சமம் இல்லாததால் ஷாடவமாயும் (ஆனால்) அவரோஹத்தில் பஞ்சமத்தையுடையதாயும், நான்காவது யாமத்தில் பாடத்தகுந்ததாயுமுள்ள ராகம் சுத்தவசந்தம்எனப்படும். இப்படித்தான் இலக்கியத்தில் பிரசித்தமாக இருக்கிறது.

(3. மாளவஸ்ரீ ராகம்)

ஷட்ஜத்தையே அம்சமாகவும், கிரஹமாகவும், உடையதாயும் ரிஷபம் இல்லாததால் ஷாடவமாயும், எல்லா யாமங்களிலும் பாடத்தகுந்ததாயும், எப்பொழுதும் மங்களத்தைக் கொடுக்கக்கூடியதாயும் உள்ள ராகம் மாளவஸ்ரீராகம் எனப்படும்.

(4. கூர்ஜரி ராகம்)

ரிஷபத்தையே அம்சமாகவும், கிரஹமாகவும், நியாசமாகவும் உடையதாயும், பஞ்சமம் இல்லாததால் ஷாடவமாயும், அவரோஹத்தில் சில சமயம் பஞ்சமத்தையுடையதாயும், தினத்தின் முதல் யாமத்தில் இசைவல்லார்களால் பாடத் தகுந்ததாயுமுள்ள ராகம் கூர்ஜரி ராகம் எனப்படும்.

(5. லலிதா ராகம்)

ஷட்ஜத்தையே கிரஹம், நியாசம், அம்சம் இவைகளாக உடையதாயும், பஞ்சமம் இல்லாததால் ஷாடவமாயும், முதல் யாமத்தில் பாடத்தகுந்ததாயும், மங்களத்தைக் கொடுக்கக் கூடியதாயும் உள்ள ராகம் லலிதா ராகம் எனப்படும்.

உத்தம ஷாடவ ராகங்கள் ஐந்தும் இவ்வாறும்.

3. உத்தம ஔடுவ ராகங்கள்—5

(1. ஹிந்தோளம்)

ஷட்ஜத்தையே கிரஹம், அம்சம், நியாசம் இவைகளாக உடையதாயும், ரி, த இல்லாததால் ஔடுவமாயும், எல்லாக் காலங்களிலும் பாடத்தகுந்ததாயும், மங்களத்தைக் கொடுக்கக் கூடியதாயுமுள்ள ராகம் ஹிந்தோள ராகம் எனப்படும்.

(2. மலஹரி ராகம்)

தைவதத்தையே அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாயும், க, நி இல்லாததால் ஔடுவமாயும், விடியற் காலையில் பாடத்தகுந்ததாயுமுள்ள ராகம் மலஹரி ராகம் எனப்படும்.

(3. தன்யாசி ராகம்)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதாயும், அநேகமாக ரி, த இல்லாததால் ஔடுவமாயும் காலையில் பாடத்தகுந்ததாயுமுள்ள ராகம் தன்யாசி ராகம் எனப்படும்.

(4. மாளவகௌளை ராகம்)

நிஷாதத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாகக் கொண்டதாயும், ரி, ப இல்லாததால் ஔடுவமாயும் (ஆனால்) சில சமயம் ரி, ப இவைகளுடன் சேர்ந்ததாயும், சாயங்காலத்தில் பாடத்தகுந்ததாயும், ராகங்களுக்குள் உத்தமோத்தமமாயும் உள்ள ராகம் மாளவகௌளராகம் எனப்படும்.

(5. ஸ்ரீராகம்)

ஷட்ஜத்தையே கிரஹம், அம்சம், நியாசம் இவைகளாக உடையதாயும், க, த இல்லாததால் ஔடுவமாயும், (ஆனால்) சில சமயம் க, த இவைகளை உடையதாயும், மாலைக்காலத்தில் பாடத்தகுந்ததாயும், எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல தாயும் உள்ள ராகம் ஸ்ரீராகம் ஆகும்.

உத்தம ஔடுவ ராகங்கள் ஐந்தும் இவ்வாறும்.

1. மத்தியம சம்பூர்ண ராகங்கள்—8

(1. கேதாரகௌளம்)

நிஷாதத்தையே நியாசம், கிரஹம், அம்சம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், தினத்தின் நான்காவது யாமத்தில் பாடத்தகுந்ததுமான ராகம் கேதார கௌளம் எனப்படும்.

(2. நாத ராமக்கிரியா)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், நான்காவது யாமத்தில் பாடத்தகுந்ததுமானராகம் நாத ராமக்கிரியாராகம் எனப்படும்.

(3. காம்போஜி)

ஷட்ஜத்தையே நியாசம், கிரஹம், அம்சம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், ஆனால் சில விடங்களில் ஆரோஹத்தில் ம, நி இவைகளற்றதும், மாலைக் காலத்தில் பாடத்தக்கதுமான ராகம் காம்போஜி ராகம் எனப்படும்.

(4. ஸாமவராளி)

ஷட்ஜத்தையே அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாயும், சம்பூர்ணமான சுரங்களை உடையதாயும், சாமவேதத்திலிருந்து உண்டானதாயும், எப்பொழுதும் பாடத் தக்கதாயும் உள்ள ராகம் ஸாமவராளி ராகம் எனப்படும்.

(5. ரீதிகௌளை)

நிஷாதத்தையே அம்சம், நியாசம், கிரஹம் இவைகளாக உடையதாயும், சம்பூர்ணமான சுரங்களையுடையதாயும், மூகாரி மேளத்தைச் சார்ந்ததாயும், மாலைக்காலத்தில் பாடத்தக்கதாயு முள்ள ராகம் ரீதிகௌளை ராகம் எனப்படும்.

(6. ஹேஜுஜ்ஜி)

மத்தியமத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், கடைசி யாமத்தில் பாடத்தக்கதும் காகலி நிஷாதம், அந்தர காந்தாரம் இவைகளால் சிறப்பிக்கப்பட்டதுமான ராகம் ஹேஜுஜ்ஜி ராகம் எனப்படும்.

(7. நாராயணி)

காந்தாரத்தையே அம்சம், நியாசம், கிரஹம் இவைகளாக உடையதாயும், சம்பூர்ணமான சுரங்களையுடையதாயும், (ஆனால்) சிலவிடங்களில் அவரோஹத்தில் ரிஷபமற்றதாயும், காலையில் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் நாராயணி ராகம் எனப்படும்.

(8. வேளாவளி)

தைவதத்தையே அம்சம், நியாசம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், (ஆனால்) அவரோஹத்தில் சிலவிடங்களில் ரிஷபம், பஞ்சமம் இவைகளற்றதும், காலையில் பாடத்தக்கதுமான ராகம் வேளாவளி ராகம் எனப்படும்.

மத்தியம ராகங்களுள் சம்பூர்ண ராகங்கள் எட்டும் இவ்வாறும்.

2. மத்தியம ஷாடவ ராகங்கள்—4

(1. கன்னட பங்காளம்)

காந்தாரத்தையே கிரஹம், அம்சம், நியாசம் இவைகளாக உடையதாயும், ரிஷபம் இல்லாததால் ஷாடவமாயும், காலையில் பாடத்தகுந்ததாயும் உள்ள ராகம் கன்னட பங்காள ராகம் எனப்படும்.

(2. பாடி ராகம்)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதாயும் காந்தாரம் இல்லாததால் ஷாடவமாயும் நான்காவது யாமத்தில் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் பாடி ராகம் எனப்படும்.

(3. வசந்த் பைரவி)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதாயும், பஞ்சமம் இல்லாததால் ஷாடவமாயும், காலையில் பாடத்தகுந்ததாயும் உள்ள ராகம் வசந்த பைரவி ராகம் எனப்படும்.

(4. குண்டக்கிரியா)

ஷட்ஜத்தையே அம்சம், கிரகம், நியாசம் இவைகளாக உடையதாயும், தைவதம் இல்லாததால் ஷாடவமாயும் (ஆனால்) சிலவிடங்களில் மட்டும் தைவதத்தையுடையதாயும் முதல் யாமத்தில் பாடத்தகுந்ததாயும், உள்ள ராகம் குண்டக் கிரியா ராகம் எனப்படும்.

மத்தியம ராகங்களுள் ஷாடவ ராகங்கள் நான்கும் இவ் வாறும்.

3. மத்தியம ஔடுவ ராகங்கள்—3

(1. மத்தியமாதி)

மத்தியமத்தையே கிரஹம், அம்சம், நியாசம் இவைகளாக உடையதாயும், ரி, த இல்லாததால் ஔடுவமாயும், தினத்தின் கடைசி யாமத்தில் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் மத்திய மாதி ராகம் எனப்படும்.

(2. பூபாளம்)

ஷட்ஜத்தையே நியாசம் அம்சம், கிரஹம் இவைகளாக உடையதாயும், ம, நி இல்லாததால் ஔடுவமாயும், விடியற் காலையில் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் பூபாளராகம் எனப்படும்.

(3. ரேவகுப்தி)

ரிஷபத்தையே கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாயும், ம, நி இல்லாததால் ஔடுவமாயும், தினத்தின் கடைசி யாமத்தில் பாடத்தகுந்ததாயுமுள்ள ராகம் ரேவகுப்தி ராகம் எனப்படும்.

மத்தியமராகங்களுள் ஔடுவ ராகம் மூன்றும் இவ்வாறும்.

இனி அதம ராகங்களுள் சிலவற்றின் இலக்கணம் சொல்லப்படுகிறது.

1. அதம சம்பூர்ண ராகங்கள்--4

(1. சௌராஷ்டிரம்)

ஷட்ஜத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், மாலைக் காலத்தில் இசைவல்லவர்களால் பாடத்தகுந்ததுமான ராகம் சௌராஷ்டிர ராகம் எனப்படும்.

(2. நாகத்துவனி)

ஷட்ஜத்தையே அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், எப்பொழுதும் இசைவல்லவர்களால் பாடத்தகுந்ததுமான ராகம் நாகத்துவனி எனப்படும்.

(3. சோமராகம்)

ஷட்ஜத்தையே நியாசம், கிரஹம், அம்சம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், மந்தர மத்தியமத்தினுல் சிறப்பிக்கப்பட்டதாகவிருப்பதும், எப்பொழுதும் பாடத்தகுந்ததுமான ராகம் சோமராகம் எனப்படும்.

(4. சங்கராபரணம்)

ஷட்ஜத்தையே அம்சம், நியாசம், கிரஹம் இவைகளாக உடையதும், சம்பூர்ணமான சுரங்களையுடையதும், சாமந்த ராகத்தின் சாயலை உடையதுமான ராகம் சங்கராபரண ராகம் எனப்படும்.

அதமராகங்களுள் சம்பூர்ண ராகங்கள் நான்கும் இவ்வாறும்.

2. அதம ஷாடவ ராகங்கள்—2

(1. கண்டாரவம்)

தைவதத்தையே, அம்சம், கிரஹம், நியாசம் இவைகளாக உடையதாயும், காந்தாரம் இல்லாததால் ஷாடவமாயும், எல்லாக்காலங்களிலும் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் கண்டாரவ ராகம் எனப்படும்.

(2. பின்னஷட்ஜம்)

ஷட்ஜத்தையே நியாசம், கிரஹம் இவைகளாக உடையதாயும், மத்தியமம் இல்லாததால் ஷாடவமாயும், எப்பொழுதும் பாடத்தக்கதாயும் உள்ள ராகம் பின்னஷட்ஜ ராகம் எனப்படும்.

அதமராகங்களுள் ஷாடவம் இரண்டும் இவ்வாறும்.

3. அதம ஔடுவ ராகங்கள்—2

(1. சாவேரி)

தைவதத்தையே நியாசம், அம்சம், கிரஹம் இவைகளாக உடையதாயும், க, நி இல்லாததால் ஔடுவமாயும், வல்லவர்களால் விடியற்காலையில் பாடத்தகுந்ததாயும் உள்ள ராகம் சாவேரி ராகம் எனப்படும்.

(2. ஆந்தோளி)

பஞ்சமத்தையே அம்சம், கிரஹம் நியாசம் இவைகளாக உடையதாயும், நி, க இல்லாததால் ஔடுவமாயும், மத்நியமாதி ராகம்போல் விளங்குகிறதாயும் உள்ள ராகம் ஆந்தோளி ராகம் எனப்படும்.

அதமராகங்களில் ஔடுவம் இரண்டும் இவ்வாறும்.

அதமராகங்களுள் சில இவ்வாறு கூறி முடிந்தன

இவ்விதமாகவே மற்ற ராகங்களையும் புத்திமான்கள் ஊகிக்கவேண்டும். அவைகள் மிகவும் சங்கீர்ணமாக (கலப்புள்ளவைகளாக) இருப்பதால், அவைகளின் இலக்கணம் தனியாக என்றால் இங்குச் சொல்லப்படவில்லை.

இசைக்கு உபயோகமான தாளம், பிரபந்தம் முதலியவைகளின் இலக்கணம் சார்ங்கதேவசூரியால் ரத்நாகரத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சங்கீதத்தின் எல்லாப்பிரிவுகளுமே அவரால் நன்றாக விளக்கப்பட்டிருப்பதால், அந்நூலிலிருந்தே அவைகள் அறியத்தகுந்தன. ஆகையால் நான் அவைகளை நன்கு விளக்கவில்லை.

சகாப்தம் 1472-ல் சாதாரண சம்வத்சரத்தில் ஆவணி மாதம் சுக்லபக்ஷம் தசமியில் ராமாமாத்தியரால் சுரங்களாகிற ரத்தினங்களுக்கு சமுத்திரம் போன்ற ரத்நாகரத்தைக் கடைந்து செய்யப்பட்ட இந்த சுரமேளகலாநிதி அனேக கல்பங்கள் (எப்பொழுதும்) புத்திமான்களுக்குச் சந்தோஷத்தை யளிப்பதாகுக.

இவ்விதம் அபிநவபரதாச்சாரியரும், வாக்கேயகாரரும்
தோடரமல்ல திம்மாமாத்தியரின் குமாரருமான
ராமாமாத்தியரால் செய்யப்பட்ட சுரமேளகலாநிதியில்
ஐந்தாவதான ராகப்பிரகரணம் முற்றிற்று.

சுரமேளகலாநிதி முற்றிற்று.

Trichinopoly United Printers Ltd, Trichinopoly.—Copies-500. Paper Party.